கொங்குத் தமிழ்
காளியப்பா (ஆர்)

# கொங்குத் தமிழ்

டி.எம்.காளியப்பா

# கொங்குத் தமிழ்

டி. எம். காளியப்பா, எம். ஏ.

தேவி பதிப்பகம்
வீரநாச்சி தோட்டம்
துடியலூர், கோவை-34

முதற் பதிப்பு—1991

விலை : ரூ. 10-00

விற்பனை

விஜயா பதிப்பகம்

20, ராசாவீதி

கோவை-1

அச்சிட்டோர்

சூப்பர் பவர் பிரஸ்

சென்னை-1.

# அணிந்துரை

**புலவர் செ. இராசு,** எம். ஏ.,
இணைப்பேராசிரியர்,
கல்வெட்டியல் துறை, தமிழ் பல்கலைக்கழகம்,
**தஞ்சாவூர்-613 005.**

செந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ் போலக் '**கொங்குத் தமிழ்**' என ஒன்று உண்டா? ஏன் இல்லை. இதோ உங்கள்கரங்களில் தவழ்கிறதே; இதுவே கொங்குத் தமிழ் !

சங்கப்பாடல்களும் (ஆகெழுகொங்கு, கொங்கு புறம் பெற்ற கொற்றவேந்தே), தண்டியலங்காரமும் (வியன் தமிழ்நாடு ஐந்து), திருமந்திரமும் (தமிழ் மண்டிலம் ஐந்து) பிற்கால இலக்கியங்களும், செப்பேடுகளும், கல்வெட்டுக் களும் கொங்குநாடு தனிநாடு என்பதை மெய்ப்பிக்கின்றன. திருவாளர்கள் தி.அ. முத்துசாமிக் கோனார், பேராசிரியர் ஆரோக்கியசாமி, சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார், அ. மு. குழந்தை, வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் போன்ற கொங்கு ஆய்வாளர்களும் இதனை உறுதிப் படுத்தி யுள்ளனர். எனவே கொங்குநாட்டுத் தமிழே கொங்குத் தமிழாகிறது !

கொங்கின் பொருளுக்கேற்ப அதனை பொன் தமிழ், மணக்கும் தமிழ், தேன் தமிழ், பூந்தமிழ் என்றும் அழைக்கலாம். இந்நூலையும் அவ்வாறு அழைக்கத் தோன்றுகிறது.

கொங்குக் குலவரிசை, கோவை வரலாறு இவைகளை நமக்களித்த கொங்குத் தமிழ்த் தந்தை பெரியவர்

திரு. டி. எம். காளியப்பா அவர்கள் இந்நூலை மிகச்சீரிய முறையில் உருவாக்கி நமக்களித்துள்ளார்கள்.

கொங்குச் சொற்களும், சொற்றொடரும், பாடல்களும், இலக்கியங்களும் பக்கத்துக்குப் பக்கம், ஏன் எழுத்துக்கு எழுத்து தம் தனித்தன்மையைக் காட்டி வீறுடன் நின்று மணம் வீசி நம்மை மகிழ்விக்கிறது. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்க பெருந்தகையாளர் டி. எம். காளியப்பா அவர்களின் கைவண்ணமும், பட்டறிவின் ஆழமும், ஆய்வு நுட்பமும், தெளிந்த சிந்தனையும் எல்லா இடங்களிலும் நன்கு தெரிகிறது. அவர் காட்டும் கொங்குத் தமிழ் நம் உயிரில், உணர்வில் கலந்து இனிக்கிறது ; இதயத்தை மகிழச் செய்கிறது.

சங்க இலக்கியம் முதல், மக்கள் இலக்கியம் வரை தொடர்ந்து கொங்கு நாட்டுத் தமிழ் எவ்வாறு சிறந்து விளங்குகிறது என்பதை ஆசிரியர் அவர்கள் மிகச் சிறப்புடன் விளக்கியுள்ளார்கள். கொங்கு உலகம் அவருக்கு நன்றி கூறவேண்டும்.

இதுபோல் பல்வேறு நூல்களை அவர் அளித்து நம்மை மகிழ்விக்க வேண்டுகிறேன். [வாழ்க அவர் கொங்குத் தமிழ்த்தொண்டு.

அன்பன்,

**செ. இராசு.**



எங்கள் தந்தை திரு. டி. எம். காளியப்பா அவர்களின் 60 அறுபது ஆண்டு நிறைவு விழாவின் அடையாள மாக 'கொங்குத் தமிழ்' என்ற இந்த ஆய்வு நூலை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

16 JUN 1991

சக்திதேவி - மனோகர்

விக்கிரமன் - பிரேமா

திருமகள் - சுந்தரேசன்

# வாழ்க்கை குறிப்பு

**பிறப்பு :** கோவை மாவட்டம், துடியலூர் - சரவண தோட்டம், முத்துசாமிகவுண்டர் — காளியம்மாள் மகனாக - 28-2-1930.

**கல்வி :** எம்.ஏ. பொருளாதாரம்.

*1942-1954* : இந்திய தேசிய காங்கிரஸ் ஊழியர்.

*1954* - அரசுபணி - செய்தித்துறை - செய்தி தொகுப்பாளர்.

*1988* - செய்தி, சுற்றுலாத்துறை இணை இயக்குநர். ஓய்வு - 28-2-1988.

**புனைப்பெயர் :** திருவாணன்.

**எழுதிய நூல்கள் :**

**சரித்திர நவீனம் :** கல்யாணபுரக் கன்னி
புலிகேசியின் காதல்
திருமலை நாயக்கன் இட்ட தீ
குலோத்துங்கன் காதலி

**கதை :** காந்தக் கோட்டை
கவிதையில் பூத்த கதைகள்
இந்திய நாடோடிக் கதைகள்
உலக நாடோடிக் கதைகள்
இந்திய ராணிகள்
மாங்கல்யம் தந்த மகராசி

கட்டுரை : அரசியல் ஊற்றுகள்
புகழேந்திய நாவலர்கள்
மேடையில் பேசுவது எப்படி?
கூட்டத்தில் பேசுவது எப்படி?
பேச்சுக் கலை
குடும்பத்தில் பெண்ணின் கடமை
குடும்பத்தில் ஆணின் கடமை
தலைவராவது எப்படி?
பெண்கள் பெருமை
ராஜதந்திரக் கலை
இருபதாம் நூற்றாண்டு மேதைகள்
வியாபாரம் செய்வது எப்படி?
வாழ்க்கையை அனுபவிப்பது எப்படி?

ஆராய்ச்சி : கொங்கு வேளாளர் வரலாறு
கோவை நகர வரலாறு
கொங்குத் தமிழ்
காணாமல் போன தமிழ் இனங்கள்
பத்துத்தலை இராவணன்
கொங்கு நாட்டில் சுதந்திரப் போர்
சர்வாதிகாரி காமராஜ்

மொழி பெயர்ப்பு : வாழ்வும் மதமும் - லியோ டால்ஸ்டாய்
சீனாவும் ருஷ்யாவும் - ஹென்றிவெய்

மணி விழா மலர் : சேனாபதி மணி விழா மலர்

குடும்பம் :

மனைவி : திருமதி சின்னத்தாய் காளியப்பா

மகள் : சக்திதேவி மனோகர் M.Sc. M. Phil
திருமகள் சுந்தரேசன் B. Sc.

மகன் : டி.கே. விக்கிரமன் D.M.E.

மருமகள் : பிரேமா B.sc.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழாவில் [25—2—88] வாழ்த்திய பாடல்

# காளியப்பா—சாதனை

கடமையில் தெளிவு—செய்யும்
கண்டிப்பில் உறுதி—எந்தப்
படைமன்னர் வந்த போதும்
பயந்திடாத்துணிவு—காந்தி
உடையெனத்தந்த காதி
உடையிலே விருப்பம்—ஆழி
மடையினைத் திறந்ததைப் போல்
மணங்கவர் பேச்சின் ஆற்றல்
மேனியில் தானா சுத்தம்
மேசையில் சுத்தம்—கோப்பு
ஆணியில் அடித்ததைப் போல்
அரைமணி இருந்ததில்லை!

ஞானிக்கு ஞானி
நல்ல நண்பர்க்கு நண்பர்
காணத்தான் வேண்டுமென்றால்
காளியப்பாவைக் காண்க!

பெரியவர் செய்தி மக்கள்
தொடர்புத்துறைக்கே என்றும்
பெரியவர் என்று வாழ்ந்த
ஒரு பெருங்காளியப்பர்

அரியவர் அரசுக்கானார்
அடியவர் அன்புக்காளார்
நெறியவர் இளைஞர்க்கானார்
நெஞ்சத்தால் வாழ்த்துகிறோம்

படித்தது எம்.ஏ.—கற்ற
பாடமோ பொருளாதாரம்
துடித்தது தேசியத்தின்
துணைப் படை வீரராக
படைத்த நூல் மூன்று பத்து
பலமுறை அச்சில்—ஆடை
உடுத்த நூல் பலவாம்—தீட்டி
உயர்ந்தனர் எழுத்து வேந்தாய்!

துறை தொறும் தொண்டு செய்தார்
தொல் தமிழ் ஆய்வு செய்தார்
நிறைவுடன் வாழ்வை நெய்தார்
நெறியிலே நின்றார் வென்றார்
துறைகளில் அரிய செய்தித்
துறையிலே உயர்வு கண்டார்
இறைவனின் அருளால் வாழ்க!
இலக்கிய இமயம் ஆக!

**(கவி - இளங்தேவன் பாடிய பாடல்)**

# கொங்குத் தமிழ்

மிகப் பழங்காலத்தில், சோழ நாட்டில் வாழ்ந்த வேளாளர் 48 குலத்தினர் சோழ மன்னரை எதிர்த்து, நாட்டை விட்டு வெளியேறி, சேரநாட்டின் கங்கில் (ஓரத்தில்) குழித்தலை செல்லாண்டியம்மன் கோயில் வட்டாரத்தில் குடியேறி வாழ்ந்தனர். காலப்போக்கில், கொங்கு நாட்டில் பரவி தங்களை கொங்கு வேளாளர் என்றும், கவுண்டன்மார் என்றும் அழைத்துக் கொண்டனர். தங்களுக்கு பொருத்தமாக கொங்கு நாகரிகம், கொங்குப் ப்ண்பாடு என்னும் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டனர். கொங்கர் பேசிய, கையாண்ட தமிழ் மொழிக்கு கொங்குத் தமிழ் என்று பெயர் ஏற்பட்டது.

சோழ நாட்டு வேளாளர் குடியேறிய காலத்தில் கொங்கு நாடு - வனப்பிரதேசம் ; கானல் காடுகள் நிறைந்த புதர் வெளியாகும் ; இருள் மண்டிய சிறைக் காடுகள் நிறைந்த வனாந்திரமாகும். புதிதாக குடியேறிய வேளாளர் காடுகளை வெட்டி, அழித்து, தோட்டங்கள் உண்டாக்கினர். கிணறுகள் தோண்டி வேளாண்மை செய்தனர். நாகரிக மேம்பாட்டிற்கு பொருளாதார வளர்ச்சிக்கு அச்சு ஆணியான தொழிலாளவர்க்கம் இல்லாமல் திணறினர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளவர்க்கத்தை அழைத்து வந்து கொங்கு நாட்டில் குடியேற்றி அவர்களை கொங்கர்களாக மாற்றி, தங்களின் கொங்கு சமுதாயத்தில் இணைத்துக் கொண்டனர் அதன் விளைவாக - கொங்கு செட்டிமார், கொங்கு முதலிமார், கொங்கு வேட்கோவர் (குயவர்) கொங்குச்சாணார், கொங்குப்பள்ளர். கொங்குப் பறையர், கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், முதலிய கொங்கு சாதிகள் ஏற்பட்டன. கொங்கு சாதிகள், கொங்கு வேளாளர் ஆணை வழி நின்று கொங்கு நாட்டில் வாழ்ந்து. கொங்கு நாட்டின் வளம் பெருக்கினர்.

தென் நாட்டை ஆதி நாளில் ஆட்சி புரிந்த வல்லரசு - பேரரசு - சதவாகன அரசு ஆகும். சதவாகன அரசை - சாதவாகன அரசு - யாதவ அரசு - சாலிவாகன அரசு என்றும் கூறுவர். இந்த அரசர்கள் ஏற்படுத்திய சகாப்தத்திற்கு - சாலிவாகன சகாப்தம் என்று பெயர் ஏற்பட்டது. சதவாகனர் ஆட்சி மொழி - பிராகிருதம். (மக்கள் பேசிய மொழி என்று அர்த்தம்) சதவாகன மன்னர்கள் வெளியிட்ட காசுகளில் ஒரு பக்கம் பிராகிருத மொழியும், மறு பக்கம் தமிழ் மொழியும் பொறித்தனர். சதவாகனர் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில், கொங்கு நாடும் ஒன்றாகும். கொங்கர் தமிழ் மொழியை சற்றே நீட்டி, தனித்தன்மையுடன் உச்சரிப்பர். கொங்குத் தமிழில் பிராகிருத மொழியின் தாக்கம் - செல்வாக்கு பதிந்திருப்பதைக் காணலாம்.

சதவாகனர் நாட்டில் வாழ்ந்த குணாட்டியர் என்னும் கவிவாணர் உதயணன் கதையை பிராகிருத மொழியில் எழுதினார். கங்க நாட்டு மன்னர் (மைசூர் மாநிலம்) துர்விநீதன், சமஸ்கிருத மொழியில் உதயணன் கதையை எழுதினார். கொங்கு நாட்டில், விஜய மங்கலத்தில் வாழ்ந்த கொங்குவேள் (கொங்கு நாட்டு குறுநில மன்னர்) கொங்குத் தமிழில், 'பெருங்கதை' என்ற பெயரில் எழுதினார். கொங்குவேள் எழுதிய பெருங்கதையில் அந்நாளில் கொங்கு நாட்டு மக்கள் பேசிய கொங்குத் தமிழ் கலந்திருப்பதைக் காணலாம். அக்காலத்தில் மக்கள் பேசிய கொங்குத் தமிழுக்கும், ஏட்டில் கொங்குவேள் எழுதிய தமிழுக்கும் நெருங்கிய உறவு இருந்ததையும் காணலாம். கொங்குவேள் வாழ்ந்த காலம் - ஏழாம் நூற்றாண்டு (600 - 700 கி.பி.)

பல்லடம் வட்டார சொற்களை திரட்டிக் கொடுத்த தொழிலாளி - கே. அய்யன் பாளையம் எஸ். வேலுசாமிக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். புத்தகத்தை சிறந்த முறையில், அச்சிட்டுக் கொடுத்த - பாரதியார்

படைப்புகளை வகுத்தும், தொகுத்தும், விரித்தும், விளக்கியும் பாரதி வல்லுநராக விளங்கும் சீனி-விஸ்வ நாதனுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆய்வுத்துறையில், தமிழ் உலகின் தலைமகனாக விளங்கும் புலவர் செ. இராசு அவர்களின் அணிந்துரைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

டி. எம். காளியப்பா

வீரநாச்சி தோட்டம்
துடியலூர், கோவை-34
தொலைபேசி : 49783

# அடங்கல்


| | | |
|---|---|---|
| சொற்கள் | ... | 1 |
| ஓலையக்கா பாட்டு | ... | 46 |
| கேந்திப் பாட்டு | ... | 49 |
| தாலாட்டு | ... | 50 |
| அழுகாச்சு | ... | 51 |

# சொற்கள்

## அ

அக்கட்டை = வெளியே

அத்துவானம் = பலக்குறைவாக இருப்பது.

அதம் பண்ணுவது = அடியோடு அழித்து ஒழிப்பது.

அப்பணை = கட்டளை - உத்திரவு.

அந்த அள்ளை = அந்தப் பக்கம். அந்த அள்ளை × இந்த அள்ளை.

அண்டக் கொடுத்தல் = சார்ந்து வாழுமாறு அனுமதிப்பது

அம்மணி = செல்லப் பெயர். பெரிய அம்மணி - சின்ன அம்மணி

அண்ணன் = சில வட்டாரங்களில் தந்தை என்று அர்த்தம். அண்ணல் என்ற சங்ககால வழக்கில் தோன்றிய சொல்.

அத்து பண்ணுதல் = உரிமையை நிலை நாட்டி, அடையாளமாக கல் நடுவது அல்லது வேலி அமைத்தல்.

அடி படாதவள் = பிறருக்கு வசமாகாதவள் - கட்டுப்படாதவள்.

அச்சு அடையாளம் = உருவ, தோற்ற ஒற்றுமை

அடங்காமாறி = சொன்ன பேச்சு கேட்காதவள் - அத்துமீறி செயல்படுகின்றவள்.

அம்பிலி = தானிய வகைகளை நெறித்து, கூழ் மாதிரி சமைப்பது.

அலைக்கொட்டுதல் = அனைவரும் சேர்ந்து கூட்டமாக, தெய்வம் வந்தேற குரல் எழுப்புவது.

அடக்கு = பேசாமல் இரு.

அலாக்கு = நடுநிலையில் இருப்பது. எதனுடனும் உறவு கொள்ளாமல் தனித்து நிற்பது.

அட்டி சொல்லாமல் = மறுப்புக் கூறாமல் பணிவது.

அடிப்போடுதல் – ஒரு கருத்தை முன்மொழிந்து அதனையே நயமாக அடிக்கடி நினைவூட்டிப் பேசுவது.

அழகை = அழகாபுரி - பாரியூரின் பழையபெயர்.

அப்பத்தா = அப்பனைப் பெற்றவள்.

அப்பார் = அப்பனைப் பெற்றவர்

அமிச்சி - அம்மாஆயி = தாயைப் பெற்றவள்.

அப்பச்சி = தாயைப் பெற்றவன்.

அப்பவும் = அப்போதே

அருக்காணி = பெண்பால் பெயர்.

அண்ணன்மார் கோயில் = பெரியண்ணன், சின்ன அண்ணன் (சங்கர்-பொன்னர்) நினைவாகக் கட்டப்பட்ட கோயில்.

அல்டீப்பாக = முழுவதும் சொந்தமாக.

அங்கிலும் = அவ்விடத்திலும்.

அங்கராக்கு = மேல்சட்டை - கவுச்சா.

அச்சகாரம் = அச்சுகிரயம் என்ற சொல்லின் திரிபு; விலை பேசி முன்பணம் கொடுப்பது.

அரக்கு = கத்தரித்து விடுவது. மேலும் வளராமல் நறுக்கி விடுவது.

அப்பாச்சி கவுண்டர் = ஆண்பால் பெயர்.

அடிமை முறி = அடிமை ஓலை எழுதிக்கொடுத்தல்.

அழிவழக்கு = வழக்கினை அடிக்கடி தன் நலனுக்காக மாற்றி மாற்றிப் பேசுவது.

அத்தனூர் அம்மன் = கவுண்டன்மார் குலதெய்வம்.

அமராவதி = ஆற்றின் பெயர் (பிராகிருதச் சொல்). தமிழ்ச் சொல் :- ஆன்பொருணை.

அதட்டி = கட்டளைக் குரலில் கடுமொழி பேசுவது.

அப்பி = தடவி - பூசி - தவலருஞ் சாந்தந்தடியற அப்பி (பெருங்கதை)

அல்ப சுல்பம் = மிகக்குறைவான மதிப்பீடு (அற்பம் - சொற்பம் - சொல் சிதைவு)

அந்தலை சிந்தலை = அந்தத் தலை - இந்தத் தலை என்ற சொல்லின் திரிபு·

அரமாத்தானே = மிகமிகக் குறைவாக.

அட்டாலி = வீட்டுவிட்டத்தின் மேல் பரண் மாதிரி பலகை அமைத்து சாமான்களை அடுக்கி வைக்கும் இடம்.

அங்கலாப்பு = மனக்குறையை - பாதிப்பை - வெளிப்படுத்திப் பேசுவது.

அங்கலாயித்தல் = குறைகளைக் கூறி தூற்றிப் பேசுவது.

அங்காமிகள் = அன்னியர்கள் - அயல்நாட்டு கொள்ளைக் கூட்டம் - அயல் நாட்டுப் பகைவர்.

அருமைக்காரன் = கவுண்டன்மாரின் புரோகிதர் - சீர் (சடங்கு) நடத்துபவர் - (சீர்க்காரர்) பெண்பால் = அருமைக்காரி - (சீர்க்காரி)

அறுத்துக்கட்டும் சாதி = விதவைக்கு மீண்டும் திருமணம் செய்யும் சாதி.

அமுசு அடக்கி புறப்படுவது = எதிர்நோக்கியுள்ள பிரச்னை களை தீர்த்து விட்டு புறப்படுதல்.

## ஆ

ஆசர் = கட்டளைப்படி முன் வந்து நிற்பது அல்லது கட்டாய மாகக் கொண்டு வந்து நிறுத்துவது.

ஆகுங்காலம் = நன்மைகள் கைகூடி வரும்காலம். ஆகுங் காலம் × போகும் காலம்.

ஆச்சுது = தயாராகி விட்டது.

ஆகிப்போச்சு = தீர்ந்து போய்விட்டது.

ஆகி = மாறி. கடன்காரன் ஆகி - கெட்டவனாகி.

ஆண்டி கவுண்டர் = சிவ பெருமானின் பெயர் (கொன்றை ஆண்டி = சிவன்).

ஆண்டி = செல்லப்பெயர் - செல்லாண்டியம்மன் (செல்ஆயி) பேராண்டி - பேரன்.

ஆத்தா = வயது முதிர்ந்த பெண்களைக் குறிக்கும் சொல்.

ஆத்தா = தேவி - பராசக்தி.

ஆயிகவுண்டர் = ஆண்பால் பெயர் - தாய்க்கவுண்டர் என்று அர்த்தம்.

ஆறை நாடு = கொங்கு 24 நாடுகளில் ஒன்று; ஆறை = கோட்டை.

ஆகா வழிப்பிள்ளை = பயன்படாத பிள்ளை.

ஆறாதணை = எல்லாவிதத்திலும் துணைபுரிவது.

ஆனமட்டும் = முடிந்தவரை.

ஆனால் = கைகூடி வந்தால்; ஆகும்மானால் என்ற சொல்லின் சுருக்கம். ஆனால் அச்சில், ஆகாவிட்டால் மிடாவில். அச்சு வெல்லமாக வார்க்க பதமானால் அச்சு வெல்லமாக்கலாம். அச்சுவெல்லம் ஆகாவிட்டால் மிடாவில் ஊற்றி, கட்டி வெல்லமாக்கலாம்.

ஆனால் = சந்தேகக் கேள்வி

ஆச்சிமாடு = பால் கறக்கும் மாடு.

ஆ மாறி = ஆண் தன்மை கொண்ட பெண் பிறவி.

ஆண்டவர் = ஆட்சி புரிந்தவர். தாய் ஆண்டவர் என்ற தெய்வத்தின் பெயர். ஆண்டாக்கவுண்டர் - ஆண்டக்கா. தாய் ஆண்டவர் கோயில் தாய்மான் நள்ளி என்ற சோழன் அடக்கம் செய்யப்பட்ட கோயில், மணப்பாறையில் அமைந்துள்ளது. தற்பொழுது தாய் ஆண்டவருக்கு நாமம் போட்டு இராமர் என்று வழிபடுகின்றனர்.

ஆகாது = பகை, விரோதம்.

ஆசாமி = ஆள்.

ஆவதில் அழிவதில் = நன்மை தீமைகளில்.

ஆக்கணம் = பசுக்கூட்டம்.

ஆந்து போவது = முற்றி முதிர்ந்து போவது. ஆன்று என்னும் சொல்லின் திரிபு. ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் (புறநானூறு.)

## இ

இட்டேறி = ஊர்புறத்து வழித்தடம்

இட்டமுடன் = விருப்பம்போல்

இடக்கு = வேண்டும் என்றே எதிர்த்து நிற்பது. இடக்கான ஆள். இடக்கான எருது.

இடங்காமுடங்கா = நெருக்கடியான வேளையில்.

இடால் = மிருகங்களை பிடிக்கும் இயந்திரம்.

இரண்டாங்கெட்டது = அப்படி செய்தாலும், இப்படி செய்தாலும் கெடுதலாக முடிவது.

இடைப்பால் சோறு = பகல் உணவுக்கும், இரவு உணவுக்கும் இடைப்பட்ட மாலைநேர உண்டி.

இடை வாடை — திருமணமான பெண்ணுடன் மறைவாக உறவு வைத்திருப்பது.

இடங்கேடு = கெடுதலான சூழ்நிலையில் வாழ்வது.

இரண்டில் ஒன்று பார்ப்பது = ஒன்று வெற்றி; இரண்டு வீரமரணம். போருக்குச் செல்வோர் எடுத்துக் கொள்ளும் சபதம்.

இசித்தல் = வருத்தம் ஏற்படுமாறு நச்சரித்தல்.

இசகடம் = தெய்வத்திற்குச் செலுத்தும் காணிக்கை.

இணையொத்தவன் = சரிசமமான பங்காளி.

இணைச்சீர் - இணை ஓங்குதல் = கவுண்டன்மார் சீர் (சடங்கு)

இடைவெட்டு = முதல்தரமில்லாமல், இரண்டாம் தரமான.

இளம்பிள்ளை = முதல் மனைவி அல்லாத இரண்டாவது மூன்றாவது மனைவிமார் பிள்ளைகள்.

இருப்பிலி = இருபில்லைபோல் அமைந்த ஊர்.

இராசை = இராசீபுரம் என்ற சொல்லின் சுருக்கம். ராஜ புரம் என்ற சொல் இராசீபுரம் என்று திரிந்தது. கொங்கு ராஜபுரத்து பெருமாளே (திருப்புகழ்) இராசைப்பதி வாழ் கைலாசநாதர் - தோத்திரமஞ்சரி.

இருசி(சு) மனசு = கொடியமனம்

இலகுங்கை = இளகிய மனதுடன் கொடுக்கும் கை.

இத்தினி = இம்மி அளவு.

இஸ்கோபருத்துதல் = நாயைக் கடிக்குமாறு உசுப்பிவிடுவது (இஸ்கோபற்றவைத்தல்)

இளந்தாரிகவுண்டர் = ஊர் கூட்டத்தை (ஊர் சபையை) முன் நின்று கூட்டுபவர்.

இன்சொல் = இனிமையான சொல். இன் சொல் × வன்சொல்

இராகி = கேழ்வரகு

இராகுது = பாய்ச்சல் பாய்வது - குதித்து ஓடுவது.

இராஞ்சுகால் போடுவது = ஆடு முன்னங்கால் இரண்டினையும் வேலிமேல் வைத்து தீனி மேய்வது.

இராட்டை வைத்து கொடுத்தல் = கவுண்டன்மார் சடங்கு - விதவைப்பெண்ணுக்கு நூல் நூற்று வாழுமாறு அறிவுறுத்தும் சடங்கு.

இராஜ்யபாரம் = ஆட்சிபுரியும் பொறுப்பு.

## ஈ

ஈஸ்வரன் = ஐஸ்வரியன் என்ற சொல்லின் திரிபு. மக்கள் வழக்கு = ஈசன். தமிழ் : செல்வன். ஆல் அமர் செல்வன் - (சங்க இலக்கியம்.)

ஈரம் இல்லாதவள் = கலவிப் புணர்ச்சிக்குத் தகுதி இல்லாதவள்.

ஈனஜாதி = தாழ்ந்த சாதி - இழிந்த சாதி.

ஈறு = பேனின் முட்டை.

ஈடு = அடி, உதை.

ஈடு கொடுத்தல் = எதிர் நோக்கி வரும் பிரச்னையை சாதுரியமாக சுதாரித்தல்.

ஈசல் = பறக்கும் பூச்சி. சிலர் உணவாகக் கொள்வர்.

ஈனுதல் = கன்று பிரசவிப்பது. மாடு, எருமை, ஆடு ஆகிய மிருக இனத்திற்குப் பொதுவான சொல்.

ஈனாக்கிடாரி = குமரிப்பசு - குமரி எருமை.

ஈஞ்சன் கூட்டம் = கவுண்டன்மார் குலப்பிரிவு.

ஈங்கு = இவ்விடம்

ஈங்கூர் = ஈஞ்சன் கூட்டத்தாரின் காணியூர்.

ஈக்கி = தட்டுக்காழியின் தோல்.

ஈட்டி = வேல்.

ஈட்டுதல் = சம்பாதிப்பது.

## உ

உக்கிடம் = உல்கு (சுங்கம்) வசூலிக்கும் இடம்.

உங்கெண்ணை = பச்சைக் குழந்தைக்கு வார்க்கப்படும் விளக்கெண்ணை.

உடைத்துப் பேசுவது = மர்மம் இல்லாமல் சுற்றி வளைக்காமல் நேரிடையாகப் பேசுவது.

உடை உடுத்துதல் = தினசரி கட்டிக்கொள்ளும் உடை.

உடுப்பு போடுவது = உடையணிந்து கொள்வது.

உப்பு = சுப்பு என்ற சொல்லின் திரிபு. சோற்று உப்பு - கடல் உப்பு - மண் உப்பு - வெடி உப்பு.

உருவாரம் = விளைச்சல் நிலத்தில் திருஷ்டி கழிக்க வைக்கப் படும் பொம்மை.

உற்ற சனம் = நெருங்கிய உறவினர்.

உறவின் முறையினர் = மொத்தமாக சொந்தக்காரர்.

உலை வைப்பது = தீமை செய்வது.

உடந்தை = ஏற்றுக்கொண்டு நடத்திவைப்பது.

உள் புகுவது = இணைத்துக்கொள்வது - ஒட்டிக்கொள்வது.

உடையடித்தல் = காய் அடித்தல் - காளை பொலிக் காளையாக மாறாமல் பயிர்த் தொழிலுக்குப் பயன்பட விதையை நசுக்கிவிடுவது.

உன்னி ஊக்கி = ஆட்களைக் கூர்ந்து நோக்கி உகந்த கட்டளை கொடுத்தல்.

உச்சாணியில் நிற்பது = சமரசப் பேச்சுக்கு இணங்கி வராமல் பிடிவாதமாக இருப்பது.

உப்போ, புளியோ = பயன் இல்லாத பேச்சு.

உட்டு வழி = தாய் - கன்று - தாய் - கன்று - என தொடர்ச்சி யான மரபு வழியை குறிக்கும் சொல். மிருகங்களுக்கு கையாளப்பட்ட சொல்.

உருமால் = தலைப்பாகை.

உசிர் = உயிர் : உசிர் பெருந்தோழன் உண்மையும் கூட்டமும் (பெருங்கதை).

உடுகறை = பரிசு - இனாம்.

உஞ்சவனத்து ஐயன் = நாட்டுராயன் - கொங்கு - 24 நாடு களையும் காத்தருளும் காவல் தெய்வம்.

## ஊ

ஊசாடுதல் = உள் நோக்குடன் வட்டமிட்டு மோப்பம் பிடிப்பது.

ஊடையம் = கோட்டை.

ஊர்வாயில் விழுவது = ஊரார் பழிக்கு ஆளாவது.

ஊடு பயிர் = முக்கிய பயிருக்கு இடைப்பட்ட நிலத்தில் குறுகிய காலத்தில் விளையும் கூடுதல் பயிர்.

ஊர்ப்பிடாரி = ஊரில் நிரந்தரமாக இருக்கும் போக்கிரி.

ஊர்க்கவுண்டர் = ஊர் முதன்மைப் பட்டம் பெற்றவர்.

ஊட்டி = உண்ணவைத்து - ஊட்டி வளர்ப்பது.

ஊரவர் = ஊர்க் கூட்டம், ஊர்ச் சபை.

ஊர் = மக்கள் வாழும் கிராமம், ஊறுகறி - ஊறுகாய் - ஒரே இடத்தில் வாழ்வதால் ஊர்.

ஊணி = அழுக்கிவை.

ஊருதல் = மெல்ல நகர்வது.

ஊமத்தை = ஒருவகை செடி.

ஊடல் கோலம் = கணவனுடன் மனைவி கோபித்து மாறுபட்டு நிற்பது.

ஊராளிக்கவுண்டர் = கவுண்டன்மார் குலப்பிரிவு.

ஊமாங்கிடை = சாதுரியமாகப் பேசத் தெரியாதவன். பேசும் திறன் இருந்தும் அதைப் பயன்படுத்தாமலிருக்கும் கழிகடை.

ஊணாங்கொடி = ஒருவகை படர்கொடி.

## எ

எக்கி = உடம்பை மேல் நோக்கிப்பார்ப்பது. பொறிநீர் **எக்கியும்** (பெருங்கதை.)

எட்டி = எகிறிப்பார்த்தல் தலையை மட்டும் திருப்பி பார்ப்பது. திட்டோளார் கொலென் **றெட்டி** - (பெருங் கதை).

எட்டு = எட்டு நாட்களைக் கொண்ட வாரம்.

என்சோடு = வயதில் என்னை ஒத்தவன்.

எதுக்காலை = நேர் எதிராக.

எசரி = போட்டியினாலும், பொறாமையாலும் கடமையைச் சரிவரச் செய்யாமல் காலத்தைக் கழிப்பது.

எத்து = ஏறுமுகமாகப் பெருகுவது. எத்து X வத்து.

எடுபட்டுப்போச்சு = அகற்றப்பட்டது - விலக்கப்பட்டது.

எழுதிங்கள் சீர் = கொங்குவேளாள குடும்பப்பெண்டிர் கற்புக்கு அடையாளமாக அனுசரிக்கும் சடங்கு (சீர்).

எச்சுமிச்சமாக = சற்று அதிகமாகவும், சற்று மிச்சமாகு மாறும்.

எகத்தாளம் பேசுதல் = வேண்டும் என்றே கிண்டலாகப் பேசுவது.

எசவு = இணக்கமாக - பொருத்தமாக.

எழுந்து போனவள் = பெற்றோருக்குத் தெரியாமல் காதலனுடன் ஓடிப்போன குமரிப் பெண்.

எம = மிக மிக - எமத்திருடன், எமக்குள்ளன்.

## ஏ

ஏழுகரை நாடு = கொங்கு நாட்டின் மறுபெயர். கரை = காணி. பாண்டியன் கொங்கு நாட்டை வென்று, தலையூர் என்னும் ஏழு காணிகளை ஏற்படுத்தி அங்கே வாள் அரசர் என்னும் பாண்டிய வேட்டுவரை குடி வைத்தான் என்பது மரபுச் செய்தி. கொங்கு நாட்டில் ஏழு முக்கிய நதிகள் இருந்ததினால், ஏழுகரை நாடு என்பது பட்டையச் செய்தி. அருணகிரிநாதர், கொங்கு நாட்டு முருகனை - ஏழு கரை நாட்டவர் தம்பிரான் எங்கள் தம்பிரானே என்று பாடியுள்ளார்.

உலகபுரம் கரை (காணி) சாத்தந்தை
கனகபுரம் கரை (காணி) சாத்தந்தை
தேவணம்பாளையம் கரை (காணி) சாத்தந்தை -
(கவுண்டன்மார் வரலாறு.)

ஏச கோசல் = மேடுபள்ளமான நிலம் - ஏற்ற இறக்கமான பூமி.

ஏசிக் காட்டுதல் = செய்த நன்மையைச் சுட்டிக்காட்டி இழித்து - இடித்துப் பேசுதல்.

ஏதப் போக்கு = தீமைவரும் வாய்ப்புக்கு இடமளிக்கும் போக்கு.

ஏனோ தானோ என்று = உண்மையான அக்கறை இல்லாமல் அரை மனதுடன் செயல்படுவது.

ஏனுங்கோ = ஏன். ங்கோ என்பது வரிசை வைத்து பேசும் கொங்கு நாட்டு மரபு. கோ என்னும் சொல் அரச மரியாதையைக் குறிக்கும் சொல். வாங்கோ - இருங்கோ - சாப்பிடுங்கோ.

ஏழு மாதர் = ஏழு கன்னிமாதர் - தங்கைமார் - எழுவர் அம்மன் என்றும் வழக்கு.

ஏகமாக = எல்லா இடத்திலும் வேற்றுமையின்றி நுழைந்து பழகுவது.

ஏக போகம் = முழுவதும் சொந்தமாக அனுபவிப்பது.

ஏர் மங்கலம் = முதல் ஏர் - பொன் ஏர் பிடிக்கும் உழவன் பாடும் பாட்டு.

## ஐ

ஐய உறவு = பிச்சையாகக் கொடுக்கப்படும் ஆதரவு அல்லது உதவி. பிறர் ஐய உறவில் வாழ்வது இழிவாகக் கருதப் பட்டது அக்காலத்தில்.

ஐந்து சாதி = காவலியர், பூவலியர், மாவலியர், வேட்டுவர், வேடர்.

ஐயம்மா = பெண்பால் பெயர். அய்யாசாமி - ஆண்பால் பெயர்.

ஐய் = இடம். ஓரண்டை (ஐ) இந்தண்டை (ஐ) அந் தண்டை (ஐ)

ஐயர் = ஐயன். முன்னோர் - கொங்கு இனப்பெரியோர்.

ஐயன் = தந்தை.

ஐயம் = சந்தேகம்.

ஐசாபைசா = சின்னஞ் சிறியதொகை

ஐயன் கோயில் = கோவை மாவட்டம், சோமனூர் அருகில் பாம்புக்கடிக்கு பரிகாரமாக மக்கள் வழிபடும் கோயில்.

## ஒ

ஒட்டமாட்டான் = உறவு - தொடர்பு - வைத்துக் கொள்ள மறுப்பவன்.

ஒட்டுவார் ஒட்டி = தொத்திக் கொள்ளும் வியாதி.

ஒட்டி = நெருங்கி. ஒட்டிய தோழரோடு கட்டுரை விரும்பி - (பெருங்கதை.)

ஒண்டிமுனி = யாருடனும் தொடர்பு கொள்ளாமல் தனித்து வாழ்பவன்.

ஒணத்தி = காயவைத்தல். உணக்கி என்னும் தூய தமிழ்ச் சொல்லின் திரிபு.

ஒற்றைக்காலில் நிற்பது = சற்றும் இறங்காமல் பிடிவாத மாக நிற்பது.

ஒப்பு ஏற்றுதல் = லாபகரமாக வேலை செய்வது போல் நடித்து நஷ்டத்தை உண்டாக்க முனைவது.

ஒண்டு = முக்கால்பங்கு மறைவாக இருப்பது. சற்றே தலையைக்காட்டி ஒளிந்து நிற்பது.

ஒரே வழியாக = பாக்கிவைக்காமல் முழுவதும் செய்து முடிப்பது. திருவிழை மகளிரோ டொருவழி வருவோய் - (பெருங்கதை).

ஒருமித்து = ஒன்றாக இணங்கி.

ஒந்திக்கோ = வழிவிட்டுநில்.

ஒந்திரித்து = ஒரு பக்கமாக வழிவிடல் - ஒரு பக்கமாக திரிதல்.

ஒருபாடு = ஏராளமாக, அதிகமாக.

ஒருசந்தி = விரதம்.

ஒச்சம் = குறை - களங்கம்.

ஒரு கை பார்ப்பது = சண்டையிட்டு வெற்றி தோல்வியைக் காண்பது.

ஒடுகாலி = யோகம் இல்லாதவள் - ராசி இல்லாதவள்.

ஓங்கார நாதம் = பேய் ஓட்டும்போது ஓ என்று அலைக் கொட்டி பலமாக குரல் எழுப்பி உடுக்கை அடிப்பது.

ஓர்ந்தபின் = நுணுக்கிப் பார்த்த பின்பு.

ஓலை = செய்தி - பால் ஓலை = நல்ல செய்தி கூறும் ஓலை. பழுதோலை = துக்கமான சேதி கூறும் ஓலை.

ஓலை = மகளிர் காதில் அணியும் கொப்பு.

ஓடு = உடன் - சேர்ந்து. ஆற்றோடு போயி - காலோடு போயி - மாட்டோடு போயி.

ஓரியாட்டம் = தகராறு - பூசல். உறியாட்டம் என்ற சொல்லின் திரிபு.

ஓதம் = ஈரப்பதம் பாதிப்பது.

ஓர்சாக = பின்னம் இல்லாமல் - முழுமையாக.

ஓநாய் = கோ நாய் என்ற சொல்லின் திரிபு. கழுதைப் புலி என்றும் கூறுவர்.

## க - கா - கி - கீ - கு - கூ - கெ - கே - கை - கொ - கோ

கசறு = சிக்கல்.

கலயம் = சுட்டிக்கு பெரியது - சட்டிக்கு சிறியது; மண் ஏனம்.

கசாமுசா = இழிவான தகவலை ரகசியமாகப் பேசுவது.

கடுகடுப்பு = கோபம்.

கடுப்பு = வேகம்.

கடுகி வருதல் = வேகமாக வருதல் - **கடுக்க** வொருமை நாடி - (பெருங்கதை).

கணக்காக = பொருத்தமாக.

கந்தர் கோலம் = கந்தல் + கூளம் என்ற இரு சொல்லின் திரிபு.

கசகசப்பு = பிரச்னையைத் தீர்க்க முடியாமல் நழுவிய நிலை.

கழி = ராகிமாவினால் கிண்டப்படும் உணவு.

கழிப்போடுதல் = வண்டியில் பூட்டிய எருது. நுகத்தடியி லிருந்து கழுத்தை விடுவித்துக்கொண்டு நிற்கும் நிலை.

கட்டுக்கலைக்காரர் = ஊழியம் புரியும் தொழிலாளர். கட்டு இலைக்காரர் என்ற சொல் - கட்டுக் கலைக்காரர் என்று திரிந்துள்ளது.

கரிசனம் = மிகுந்த அக்கறை.

கங்குவைத்தல் = குறிவைத்தல் - கண்வைத்தல்.

கரை = காணி.

கவண் = கல் வீசும் கயிற்று இயந்திரம்.

கவுண்டர் = காமிண்டன் என்ற சொல்லின் திரிபு. கா = காப்போன். மிண்டன் = வல்லவன்.

கவுண்டிக்கை = மிடுக்கான ஆட்சி அதிகாரம்.

கட்டிய ஏர் = உழுவதற்கு கட்டிய ஏர்.

கங்காணம் = பயந்து ஓடுதல் - வந்த நாயின் வாலை வெட்டினால், கண்ட நாய் கங்காணம்.

கரடு = மொட்டைக்குன்று.

கம்மியாக = குறைவாக.

கண்ணு = கன்று. இளங்கன்று - சேங்கன்று. கன்று = ஐந்து வயது வரை. காளை = 10 வயது வரை. எருது = 15 வயது வரை.

கழி = கழிக்கப்பட்ட இடம். இடைக்கழி - புடைக்கழி.

கரடிவித்தை = போர்க்கலை நுட்பம்.

கம்பர் குலம் = உவச்சர் குலம். பண்டாரம் = ஆண்டி. ஆண்டி என்னும் சொல், கொன்றை ஆண்டியான சிவன் கோவில் பூசாரிகள் என்று பொருள் படும்.

கட்டிவராமல் = போதுமானதாக இல்லாமல் இருப்பது.

கடிவாய் = நெருக்கடியான - இறுதி வேளை.

கட்டாமனை = கர்த்தாமனை என்ற சொல்லின் சுருங்கிய வடிவம். கர்த்தாமனை - ஆட்சி புரியும் இடம்.

கவுச்சா = அங்கராக்கு - மேல் சட்டை.

கட்டு பண்ணுதல் = விதிமுறைப்படி வகுத்து செயல் படுத்துதல்.

கதிக்கும் = சிறந்து விளங்கும்.

கந்தமா புரிப்பட்டணம் = திருமுருகன் பூண்டி.

கந்தாயம் = நிலவரி.

கவலை = கிணற்றில் நீர் இறைக்கும் இயந்திரம். கார் + ஆலை = கவலை என்று திரியும், கார் = பயிர் கார்க் கரும்பை - (பட்டினப்பாலை.)

காராட்டுக் காலம் = மிருகங்களுக்கு காமவெறி வரும் காலம்.

காவழங்குதல் = கவுண்டன்மார் சடங்கு

காமோதிரம் = கவுண்டன்மார் சடங்கு

காடி = மாடுகள் தீனிதின்னும் இடம்.

காலாவதி = ஒப்பந்த காலம் முடிவுக்கு வருவது - காலகதி என்ற சொல்லின் திரிபு.

காடு = புன் செய் நிலம். செங்காடு - சல்லிக்காடு - மணல் காடு - கல்லாங்காடு.

காடு = வனம் - பெருங்காடு - சிறைக்காடு.

காவுகொடுத்தல் = பலிகொடுத்தல்.

காரை = தாலியைத் தங்க வளையத்தில் கோர்த்து அணியும் நகை.

கிலி = பயத்தின் உச்சகட்டம்.

கிண்டப் பார்க்கிறான் = ஏமாற்றி அனுபவிக்க முயல்வது.

கிடை கிடைப்பது = ஒரே இடத்தில் இருப்பது. கிடை தண்ணி, கிடைபட்டி, கிடைநோயாளி.

கிட்டவா = அருகில் வா. கிட்டவா × எட்டபோ.

குறியாப்பு = உணவுப் பொருள்களை குறுகிய காலத்திற்கு கொடுத்து அதே அளவு திரும்பப் பெற்றுக் கொள்ளல்.

குறியாப்பு என்ற சொல், குறியெதிர்ப்பை என்ற சொல்லின் திரிபு.
வறியார்க் கொன்றீவதே ஈகை மற்றெல்லாங்
**குறியெதிர்ப்பை** நீரதுடைத்து (திருக்குறள் - 221)

குட்டாக இருப்பது = உள்வலிமையை யாருக்கும் தெரியாமல் மூடிவைத்து ஒருங்கிணைத்து ஒற்றுமையாக இருப்பது.

குடிப்பாடு தெய்வம் = குலதெய்வம் - காணி தெய்வம்.

குட்டை = நீர் நிலை. இட்டிகைப்படுகாற்கு **குட்டை** கோணத்து - பெருங்கதை.

குஞ்சானும், நஞ்சானும்
குஞ்சும் குளமானும்
} குஞ்சான் = இளங்குழந்தை. குளமான் = இளங்குட்டி. குஞ்சப்ப கவுண்டர்.

குய்யம் = வெட்கம்.

குண்டில் = பாத்தி. குண்டல் என்று திரிந்து வழங்குகிறது.

குறை = ஆடுமாடு மேயவிடப்பட்ட புல்வெளி. புல்வெளி - புன்குறை. குறங்காடு, கொறங்காடு.

குமுக்கு கூட்டுதல் = சண்டைக்கு ஆள் சேர்ப்பது.

குத்தேறி = கதிர்களைக் குச்சிட்டு கூர்மையாக அடுக்கி வைப்பது.

குட்டப் பறுத்துதல் = குடும்பத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக நட்டத்தை கொண்டுவருவது.

குப்பாரி கொட்டுதல் = கவுண்டன்மார் திருமணச்சீர் - (முரசு கொட்டுதல்)

குறும்பு = கோட்டை, அரண். குறும்பு நாடு - கொங்கு 24 நாடுகளில் ஒன்று. அருங் குறும்புடுத்த கானப் பேரெயில் (புறநானூறு).

குப்பை கொட்டுதல் = குடும்பத்தைச் சிறப்பாக நடத்தி சுதாரிப்பது.

குனுகுதல் (கொணைத்தல்) ஆசையுடன் மெல்லிய குரலில், கூறுவது.

குட்டி = செல்லப் பெயர். ஆறுக்குட்டி, ராமுக்குட்டி நஞ்சக்குட்டி,

கூழையக்கா = பெண்பால் பெயர்.

கூழை = இளமகளிர் கூந்தல் (பேதைப் பருவம்) கோலங் கொண்ட குறுநெறிக் கூழையொரு சிகை - (பெருங் கதை.)

கூதல் = குளிர்.

கூனை = தானியத்தை இருப்பு வைக்கும் முறை. குதிர், குழி, சேரி, கோட்டை, பை, குலுவை, மிடா.

கூமாட்சி = கூர்மை சிறப்பாக இருப்பது. கூர்மை + ஆட்சி = கூமாட்சி.

கூட்டம் = குடி, குலம்.

கெலித்தல் = வெற்றிபெறுவது.

கெந்தவெளி = ஒன்றும் புரியாதவன்.

கேந்தி = மிகுந்த ஆசைவெறி.

கேப்பைமாறி = மிகவும் திறமையாக ஏமாற்றுகிறவன்.

கேப்பை = கேழ்வரகு

கேனத்தனம் = புத்தி கூர்மையில்லாமல் மசமச என்று இருப்பது.

கைகூடுங்காலம் = நன்மை கிடைக்கும் காலம் - **கைகூடுங்** காலமிதுவென (பெருங்கதை).

கை கடந்து = கை நழுவி.

கை ஆடுதல் = உதை கொடுப்பது.

கை சோர்ந்த காலம் = உழைக்க முடியாமல் வலிமை இழந்த காலம்.

கை சேரும் காலம் = நன்மை வந்து சேரும் காலம்.

கைகாரி - நளினமாக ஏமாற்றுகிறவள்.

கொம்பு சீவுதல் = சண்டைக்கு உசுப்பிவிடுவது.

கொங்கு திருநீலகண்டர் = கொங்குநாட்டு வேட்கோவர் (குயவர்)

கொன்னை ஆறு = வளைந்த ஆறு.

கொன்னை வாயன் = குளறிப் பேசுபவன்.

கொள்ளிவாய் பிசாசு = தீயை விட்டுவிட்டு கக்கும் பிசாசு.

கொள்ளி கோடி = பிணத்திற்குச் செய்யப்படும் சடங்கு.

கொங்கர் கோமான் = கொங்கு நாட்டை வென்ற மன்னர்கள் சூடிக்கொண்ட பட்டம்.

கொங்குராயன் = இரு பொருள் வார்த்தை. (1) கொங்கரை வென்ற அரையன் (2) கொங்கர் இனத்தில் தோன்றிய அரையன்.

கொங்கு ஆடை = கங்கு ஆடை என்ற சொல்லின் திரிபு. கொங்கு நாட்டில் மழை காலத்தில், துப்பட்டி அல்லது சாக்கு நுனியை (கங்கு) மடித்து தலையில் குடை மாதிரி கவிழ்த்துக் கொள்வர்.

கொட்டாரம் = கூரை போட்ட சாளை. படைக்கல கொட்டிலும் புடைக் **கொட்டாரமும்** (பெருங்கதை).

கொங்கன் = கொங்கு நாட்டான்.

கொங்குச் சாயல் = பேச்சு நடை உடை பாவனையில் அச்சு அடையாளத்தில் கொங்கு அறிகுறி - அடையாளம்.

கொங்குத்தரம் = மாடுகளைத் தரம் பிரிப்பதில் 1) மலை எருது. 2) காங்கேய எருது. 3) கொங்கு எருது என்ற மூன்று வகையாகப் பிரிப்பர்.

கொங்கு சாதிகள் = கொங்கு வெள்ளாளர் - கொங்கு முதலிமார், கொங்குச் செட்டிமார், கொங்குச் சாணார்' கொங்குவேட் கோவர், கொங்குப் பள்ளன், கொங்குப் புலவன், கொங்கு நாவிதன், கொங்கு வண்ணான், கொங்குப் பறையன். கொங்கு நாகரிகத்தைத் தழுவி வாழும் சாதிகள். கொங்கு என்னும் அடைமொழி ஏந்திய இனங்கள்.

கொங்குசீர் = கொங்கர் அனுசரிக்கும் சடங்கு.

கொங்கு மழை = கொங்கு நாட்டில் பொழியும் மழை.

கொங்கு நாகரிகம் = கொங்கரின் புற வாழ்க்கை நெறி முறைகள்.

கொங்குப் பண்பாடு = கொங்கரின் அகவாழ்க்கை முறைகள்.

கொங்கு வஞ்சி = மலை நாட்டு வஞ்சி நகரை வேறுபடுத்திக் காட்ட கொங்கு அடைமொழி. (1) கரூர் (2) தாராபுரம் (3) மூலனூர் ஆகிய மூன்று கொங்கு வஞ்சி நகர்கள் இருந்தன.

கொசரம் = க்காக. உனக்கொசரம், எ ன க் கொ ச ர ம் , யாருக்கு கொசரம்.

கொட்டித் தட்டி - கொட்டி முழக்கி = நன்மை தீமைகளில் பறையொலி, முரசு ஒலி, எக்காள, கொம்பு ஒலி எழுப்புவது. கருங்கட்டம்பை நெருங்கக் **கொட்டி**(பெருங்கதை.)

கொட்டை நூற்பது = பருத்தியிலிருந்து கொட்டையை நீக்கிப் பஞ்சாக்குவது.

கொத்துக்காரன் = ஊர்த்தலைவன், பண்ணை மேலாளர்.

கொழுக்கட்டை புல் = காங்கேய நாட்டில் வளரும் புல்.

கோணைக்கழி = இடக்கு செய்வது - ஒத்துப் போகாமல் எதிர்ப்பது.

கோடுபாடு = மூலைமுடுக்கு

கோதி = கோலி என்ற சொல்லின் திரிபு. மண்ணைக் கோதிப் போடு.

கோம்பு = கூம்பு என்ற சொல்லின் திரிபு - தட்டுக்கோம்பு - வைக்கோல் கோம்பு.

கோப்பு = அறிகுறி - அடையாளம். மழைக் கோப்பு, கல்யாணக் கோப்பு.

கோடி = புதிய துணி.

கோச்சை எடுத்தல் = சேவல் சண்டையில், தோற்ற சேவலைக் கைப்பற்றிக் கொள்ளுதல்.

கோட்டம் = வளைவு - சக்கரம் கோட்டமாக வுள்ளது.

## ச - சா - சி - சீ - சு - சூ - செ - சே - சை - சொ - சோ -

சலீசு = மலிவாக.

சம் என்று இருத்தல் = வசதியாக இருப்பது.

சடுதி = வேகமாக.

சள்ளை வாயன் = சளவாய் நீர் ஒழுக்குபவன்.

சப் என்று போய்விட்டது = ஏமாற்றத்தின் அடையாளம்.

சல்லியம் = சண்டை - கலகம்.

சலகை = 30 வள்ளம் - வள்ளம் 4 நாட்டுப் படி - 2 பட்டணம் படி.

சந்தை நெசவு = அவசர நெசவு.

சதுர்பூமி = நான்கு பக்கமும் சதுரமான பூமி.

சதுர் ஆட்டம் = நாட்டியம். நான்கு பக்கமும் திரும்பித் திரும்பி ஆடுவதினால் சதுர் ஆட்டம்.

சரி இருப்பு - சரிமரியாதை = இணையொத்தவனாக நடத்துவது.

சமைதல் = ருதுவாவது - பெண் சமைந்து விட்டாள்.

சடையன் = சிவபெருமான்.

சடைச்சி = பார்வதி.

சர்க்கரை புளியஞ்சோறு = முழுகாமல் இருப்பவளுக்குச் (கர்ப்பிணி) சமைத்துப் போடப்படும் சிறப்பு விருந்து.

சம்மணம் போட்டு உட்கார்வது = காலை மடக்கி வசதி யாக உட்கார்வது.

சக்கிமுக்கி = தீயை உண்டாக்கும் கருவி.

சகலை - சகலைப்பாடி = சட்டகர் - மனைவிவுடன் பிறந்த வளை மணந்து கொண்டவர்.

சங்காத்தம் = உறவு - சங்க என்ற சொல் தோழைக் குறிக் கும் - தோழமை.

சாளை = விளையும் நிலத்தில் கட்டப்பட்ட சாளை. காட்டு சாளை - தோட்டத்து சாளை - வீட்டிற்கும் சாளைக்கும் வேறுபாடு உண்டு.

சாடு = எகிறிப் பாய்தல் - சாடு பயிர் - சாடும் தீ.

சாமி - செல்லப் பெயர். பெரியசாமி - நடுச்சாமி - சின்ன சாமி.

சாடாய் = ஒருங்கே - ஒரே சீராக.

சாலிவாகண வம்சம் = யாதவ வம்சம் - உடையார் வம்சம்.

சாரமில்லை = பயன் இல்லை. சாறு இல்லை வெறும் சக்கை என்று அர்த்தம்.

சாரி பாளையப்பட்டு = ஆயுதம் வைத்துக் கொள்ளும் உரிமை பெற்ற பாளையம்.

சாம்பி = வாடி. புல்லென சாம்பி - (பெருங்கதை.)

சாலாணி = சால்ஏணி. சால் = குடிநீர் பாத்திரம், ஏணி போன்ற மரநாற்காலியில் அப்பாத்திரம் வைக்கப்படும்.

சின்னச்சாமி = முருகன்.

சிலை பிடிப்பது = கொடிய வெயிலின் காரணமாகக் கால் நடைகளுக்கு வரும் நோய்.

சிற்றாடை = பாவாடை நாகரிகம் வருவதற்கு முன்பு கொங்கு நாட்டு கன்னிப் பெண்கள் அணிந்த சிறிய ஆடை.

சித்தே = சற்றே என்ற சொல்லின் திரிபு.

சிந்தாக்கு = மகளிர் நகை.

சிம்பு = செடியின் கிளை இலைக்கு அருகே முளைக்கும் தளிர்.

சிம்புதல் = மென்மையாகக் கோபித்தல்.

சிறுக்கி = இழிவுக்குறிப்பு - இழிவான குணம் படைத்த பெண்.

சின்ன அம்மன் = சின்ன அம்மாள் என்ற பெண் கணவன் இறந்தவுடன் தீப்பாய்ந்து உயிர் நீத்தாள்.

சிறைவெட்டி = கானல் காடுகளை வெட்டுதல்.

சிங்கையம்பதி = காங்கேயத்தின் அசல் பெயர். சிங்கர் ஆண்ட காரணத்தினால் சிங்கை. மைசூர் சீயகங்கர் சிங்க மரபினர்.

சிலுவானம் = சில்லறை.

சிலுவானமாக நினைக்காதே = சாதாரண ஆள் என்று நினைக்காதே.

சீந்துவாரில்லை = என்ன விலை என்று கேட்பதற்குக் கூட ஆள் இல்லை.

சீமாறு = சீர் + மாறு = சீமாறு - துடைப்பம்.

சீர் = சடங்கு - சீர் = சிறப்புச் செய்தல் - அருமைப் படுத்து தல். சீர்க்காரன் = கொங்கரின் புரோகிதர். சீர்க்காரன் அருமைக்காரன் என்றும் வழங்கும் மரபு.

சீர்கெட்டுப்போவது = பழுதுபட்டுப் போவது.

சீராடுதல் = பிணக்கு - மென்மையான கோபத்திற்குச் சீராடுதல் என்று பெயர். அத்தகைய கோபத்தைத் தணிப்பதற்குச் சீராட்டு தெளிதல் என்று பெயர். சீராடு வதில் பல நிலைகள் உண்டு.

சீரழித்தல் = கொடுமைப்படுத்துவது.

சுழி = விதி.

சுக்குள் வைத்துப் பேசுவது = பொடி வைத்துப பேசுவது.

சும்மா சொல்வது = வெறும் பேச்சுக்காகக் கூறுவது. ஏதோ பேச வேண்டும் என்பதற்காகப் பேசுவது.

சும்மா நாச்சுக்கும் = வெறும் பேச்சுக்காக.

சுதாரி = தைரியமாகப் பிரச்னையை எதிர் நோக்கிச் சமாளிப்பது.

சுப்புராய தண்டம் = கூலி இல்லாத வெட்டி வேலை.

சும்மாடு = சுமை ஆடை.

சூந்து = சுளுந்து - தீப்பந்தம்.

செகுணி = கன்னம்.

செகை = சூட்டின் பாதிப்பு - செகை அடித்து விட்டது.

செராய் = மரப்பட்டை. கால் செராய் = இடுப்பில் அணியும் உடை.

செடிதல் = மண்ணைக் குத்தி இறுக்கிக் கெட்டியாக்குதல்.

செகுட்ட முடியாது = சவட்ட முடியாது என்ற சொல்லின் திரிபு. பைந்தலை சவட்டி (அக நானூறு)

சேடை நீர் = புதிதாக நடப்பட்ட பயிர்களுக்கு பாய்ச்சும் சளுவுநீர், உசுப்பு நீர்.

சேடன் = பெருமை ஏந்தியவன். சேடன் கூட்டம் = கவுண்டன்மார் குலப் பிரிவு. கோடாபதியின் **சேடணி** கண்டே (பெருங்கதை.)

சேகு ஏறிய ஆள் = முற்றி முதிர்ந்த அனுபவம் உடைய ஆள்.

சேரழம் = மலையாழம்.

சேமலை = சிவன் மலை. சேமலைக் கவுண்டர்.

சோழீஸ்வரர் = கொங்குநாட்டில் சோழமன்னரால் நிலை நாட்டப்பட்ட சிவன் கோயில்.

சோடித்தல் = கோடித்தல் என்ற சொல்லின் திரிபு. ஒப்பனை - அலங்காரம் செய்தல். கச்சுவாய் **கோடித்து** முத்துப்புரி நாற்று - (பெருங்கதை.)

சோட்டாளி - ஒத்தவயதினர் - ஒன்றாக வளர்ந்தவர் - ஒன்றாக வாழ்ந்தவர்.

சோப்பளாங்கி = வளையாமாறி - குனிந்து சுருசுருப்பாகப் பணி செய்யாதவள்.

சோலி - சோதிக்கும் கருவி. பாதாள சோலி

சோலி = வேலை - அலுவல் - சோலியாக வெளியே போய் விட்டான்.

## த - தா - தி - தீ - து - தூ - தெ - தே - தை - தொ - தோ -

தலைத்தலை = இடத்திற்கு இடம் - பத்துத்தலை இராவணன் - பத்து இடங்களில் தலைநகர் வைத்து மன்னாதி மன்னனாக ஆட்சி புரிந்தவன்.

தலைக்கட்டு = தலைமுறை.

தருவிச்சு = நேரில் வருமாறு கட்டளையிடுவது.

தண்டு = வரிவசூலிப்பது.

தண்டிக்கோல் = கடிநாயைப் பிணைத்து எட்டப் பிடிக்கும் கோல்.

ததுக்கி = ஏமாற்றுகிறவள்.

தவசம் = தானியத்திற்குப் பொதுவான பெயர்.

தள்ளி வைப்பது = திருமணம் முதலிய நற்காரியங்களுக்கு அழைப்பு இல்லாமல் ஒதுக்கி வைப்பது.

தலைப்படுதல் = தீவிரமாக ஈடுபடுவது. நிலைப்படு காமந் **தலைபடத்** தரியான் - (பெருங்கதை.)

தலை கொடுப்பது = மேற்கொள்வது - ஏற்றுக் கொள்வது. தலைக்கொண்டு என்ற சொல்லின் திரிபு. **தலைக் கொண்டு** - (பெருங்கதை.)

தங்கம்மன் = தங்கைமார் அம்மன் - கன்னிமார் - சப்த கன்னியர் கொடுமணல் தங்கம்மன் - கவுண்டன்மார் குலதெய்வம்.

தமிழ்வகை கொங்கசாதி = கொங்கு சாதிகள்.

தம்பிராட்டியம்மன் = ஈஞ்சன் குலத்தார் குலதெய்வம் ஈங்கூரில் எழுந்தருளி யுள்ள தெய்வம். சேர அரசியால் நிலைநாட்டப்பட்ட தெய்வம். தம்பிரான் = அரசன் : மலைநாட்டு தமிழ் தம்பிராட்டி :
மலைநாட்டு தமிழ் = அரசி.

தம்பாக் கவுண்டர் = தம்பிராட்டி அம்மன் வழியாக ஏற்பட்ட பெயர்.

தம்பி = கவுண்டன் மார்தலை மகனை - 'தம்பி' என்று செல்லமாக அழைப்பர். தம்பி = அரசன் என்று பொருள். மலைநாட்டுத் தமிழ். தம்பி கவுண்டர், கொங்கு நாடெங்கும் வழங்கும் பரவலான பெயர்.

தலைக்கு மேலே செலவு = அவசரமான, உடனடியாக செய்யப்பட வேண்டிய செலவு.

தனமாக = விதமாக - நல்லதனமாக -பெரியதனமாக

தள தந்திரம் = போர்ககலை நுட்பம் - தோது.

தப்பிலி = தாய் சொல்லை மீறி நடப்பவன்.

தாய் = ஆண்பால் பெயர் - ஊர்ப்பெயர் - பெரியதாய், சின்ன தாய், பொன்னுத்தாய், தாயம்மாள் - தாயிகவுண்டர் - தாயனூர் - தாய்பாளையம். தாய் ஆண்டவர் என்ற அரசன் நினைவாக ஏற்பட்ட பெயர் - தாய் ஆண்டவர் என்பவர், தாய் மான் நள்ளி என்ற சோழ அரசன். தாயைப்போல் பாசம் காட்டி ஆட்சி புரிந்ததால் தாய்மான் நள்ளி என்ற பெயர் ஏற்பட்டது. திருச்சி மலைமேல் தாய்மான் ஈஸ்வரர் கோயிலைக் கட்டியவர். மணப்பாறையில் அடக்கமான இடத்தில் கோயில் கட்டப்பட்டு ஆண்டவர் கோயில் என்று அழைக்கப் பட்டது. கொங்கர் தாய்மான் நினைவாகப் பெயர் சூடி கொண்டாடி வந்தனர்.

தாங்கு = மிகுந்த பாசத்துடன் போற்றுவது.

தாவளம் = வணிகர்கள் தங்கி இளைப்பாறிச் செல்லும் இடம்.

தாவு = இடம். அணைகட்டுவதற்கு அது நல்ல தாவு.

தானு = நீங்கள்.

தாவரித்தல் = வைத்துக் காப்பாற்றுவது.

தாட்டிமை = சமாளிக்கும் திறமை.

தாட்டிகன் = சிறப்பாக நடத்திக் காட்டுபவன்.

தாட்டும் = போதுமானது. சந்தையில் வாங்கி வந்த புளி அடுத்த வாரம் வரை தாட்டும்.

தாட்டிவிடுவது = உடன் சென்று வழி அனுப்புதல்.

தாட்டிவிடல் = கட்டாயமாக வழி அனுப்புவது.

தாளிக்கிறாள் = திட்டுகிறாள்.

தித்துவழி = திருத்தும் வழி.

தீவல் = சோற்றுச் சட்டியின் அடிப் பாகத்தில் கருகிய உணவு

தீத்தன் = தீயை ஏந்திய சிவபெருமான், தீத்தாக்கவுண்டர் தீத்தமலை.

துளாவுதல் = தேடுவது.

துக்குடி = வட்டாரம்.

துக்காச்சி = துர்க்கைநாச்சி. துர்க்கை = காளி.

துள்ளு மீசை = முறுக்கி எகிறி நிற்கும் மீசை.

தூறு = குத்தாக வளர்ந்த செடி. வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்த **தூறு** போலக் கெடும். (திருக்குறள்.)

தூறி = ஊஞ்சல். தூறி ஆட்டம்.

தென்னம் பழம் = தேங்காய்.

தென்திசை குடியானவர் = கொங்கு வேளாளர்.

தென்தலை வேளாளர் = கொங்கு வேளாளர்.

தெத்தி = தெற்றி என்ற சொல்லின் திரிபு.
தெத்தி × தொத்தி

தெவைத்தல் = தாகம் - தண்ணிதாகம்.

தெளிந்த கள்ளி = கைதேர்ந்த கள்ளி.

தென் தனத்தான் = வேலையில் அக்கறை இல்லாமல் பாட்டுப் பாடித் திரிபவன்.

தொக்கடை = எதிர்வாதம் - எக்கடைக்குத் தொக்கடை.

தொக்கடவு = தொத்தி நுழைந்து செல்லும் சிறிய வழி. கடவு = வழி.

தொத்தி = தொற்றி என்ற சொல்லின் திரிபு. தொத்திக் கொள்வது, தொத்து நோய்.

தொண்டு = கொங்குத் தமிழில் தொண்டு என்னும் சொல் இழிவான அர்த்தத்தில் வழங்கிவருகிறது. தொண்டு = ஒழுக்கம் இல்லாத பெண்.

தொண்டுப் பட்டி = களவுபுரியும் ஆடுமாடுகளை அடைக்கும் கொட்டில்,

தொண்டுக் கவுண்டன் = களவுமுறையில் பிறந்தவன்.

தொண்டைமான் = அச்சுத களப்பாளன், மூவேந்தர்களைத் தொண்டைமண்டலம் ஆமூர் சிறையில் அடைத்து வைத்தான். பூசன் குலத்தினர், அச்சுத களப்பாளனை வென்று, ஆமூர் சிறையை உடைத்து, மூவேந்தர்களை விடுதலை செய்தனர். அதன் காரணமாக, கவுண்டன் - மாரில் பூசன் குலத்தினருக்குத் தொண்டைமான் என்ற பட்டம் கொங்கு நாட்டில் வழங்கி வருகிறது.

தொடு தோல் = செருப்பு - பாத அணி.

தொடுவது = மாட்டிக்கொள்வது. செருப்பைத் தொடு.

தொழிக்கமுடியாது = ஒன்றும் செய்யமுடியாது. தகர்க்க முடியாது.

தோராயம் = பழம் பெருமையை உயர்த்திப் பேசுவது.

தோராயமாக = சுமாரான மதிப்பீடு.

தோர்வை யாகுதல் = கன்னிப்பெண் ருது அடைவது.

தோது = நுணுக்கமான தந்திரம்.

தோட்டம் = கிணற்று நீரில் விளையும் நிலம், தோட்டக் கால். தோண்டா - பிராகிருதம்.

தோப்புக்கரணம் போடுவது = சொன்னபடி நடப்பது - மிகவும் பணிந்துபோவது.

## ந - நா - நி - நீ - நு - நூ - நெ - நே - நொ - நோ -

நங்கை = அண்ணன் மனைவி - பெண் இனத்தில் சிறந்தவள் என்று அர்த்தம்.

நல்லம்மை = நல்லநாயகி - சொல்லாண்டியம்மனுக்கு (செல் ஆயி) மறு பெயர்.

நல்லிகவுண்டர் = நள்ளி என்ற சொல்லின் திரிபு. நள்ளி = நடுநிலையில் இருப்பவன். நல்லி பாளையம் - நல்லு சாமிக் கவுண்டர் - நல்லியப்ப கவுண்டர் - நல்லிகட்டிக் கவுண்டர்.

நல்ல துருசு = மிகவும் வேகமான - சுருசுருப்பான.

நலம் பொலம் = நலம் மகிழ்ச்சியான நிகழ்வுகள் - நலம் × பொலம். பொலம் - துக்கமான நிகழ்வுகள்.

நடுவலவன் = மூத்தவனுக்கும் இளையவனுக்கும் நடுவில் பிறந்தவன்.

நாளாசரிதையில் = நாள் சரியச் சரிய - காலம் செல்லச் செல்ல.

நாட்டுக் கவுண்டர் = நாட்டை ஆட்சி புரிந்த கவுண்டர்

மோரூர் நாடு - கண்ணகுலக் கவுண்டன்மார்.

இராசீபுரநாடு - வெளிய குலக்கவுண்டன்மார்.

நாட்டார் சபை = கொங்கு 24 உள் நாடுகளைக் கொண்டது. நாடுகளின் தலைவர்கள் கூடும் அவைக்கு நாட்டார் சபை என்று பெயர்.

நாதன் = தலைவன்.

நாணிட்டான் = தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

நாட்டுக்கல் சீர் = கவுண்டன்மார் திருமணச்சடங்கு கொங்கு 24 நாட்டாரையும் அழைத்து திருமணம் நடத்துவதற்கு அடையாளமாக நாட்டுக்கல்லை மணமகனும், மணமகளும் வணங்கு சீர் (சடங்கு)

நாறி = பெண் பால் பெயர். மணம் நிறைந்தவள். மலை **நாறிய** வியன் ஞாலம் - (மதுரைக் காஞ்சி)

நிரவி - நிரப்பி - சமன் செய்வது. வெண்மணல் **நிரப்பங்** கொளீ இக் - (பெருங்கதை.)

நிறை நாழி = கவுண்டன்மார் சீர் (சடங்கு) நாழி என்பது முகத்தல் அளவை. அதில் நெல் நிறையப் போட்டு, அதிலே தக்கழியை குத்தி, மங்கலப் பொருளாக வைப்பர்.

நிமித்தமாக = காரணமாக

நும்பலம் = நுண் பலம்.

நொடி = சிறிய குழி.

நேர்ந்து கலந்து = பாசத்துடன் இன்பதுன்பத்தைப் பகிர்ந்து வாழ்வது.

நேம்பான வேலை = மென்மையான வேலை.

நேத்தி = அழகான. சீரான - நேர்த்தி என்ற சொல்லின் திரிபு.

நொக்கி போடுவாள் = திறமையாகச் செய்து முடிப்பாள்.

நோக்காடு = உள் நோக்குடன் செயல்படுவது. நோக்கு + ஆடு = நோக்காடு.

சாக்காடு = பொய் காரணம். நோக்காடு × சாக்காடு.

நெட்டித் தள்ளுதல் = வலுவந்தமாக வெளியே தள்ளுதல்

நெட்டி × நொட்டி (விருப்பமாக வருவது)

நோர்வாய் = தேவையில்லாமல் பேசிக் கொண்டே இருக்கும் இயல்பை குறிப்பது.

நோறியாயம்/நுறியாயம் = நியாயத்திற்கு எதிர் ப்பாக வக்கணை பேசுதல்.

## ப - பா - பி - பீ - பு - பூ - பெ - பே - பொ - போ -

பதவல் = புல், பூண்டு, செடி, கொடி - பொதுவான பெயர்.

பள்ளையம் = காவல் தெய்வத்திற்கு படைக்கப்படும் பொருள்.

பட்டம் கட்டுதல் = தாய்மாமன் மணமகளுக்கு நெற்றிப் பட்டம் கட்டி சீர் செய்தல், கவுண்டன்மார் சடங்கு.

பவுசு - ஆள் அதிகாரத்துடன் மிடுக்காக இருப்பது.

பருப்பும் சோறு உண்பது = திருமணத்தை நிச்சயித்து அதற்கு அடையாளமாகப் பருப்பும் சோறு விருந்து உண்பது.

பரம = மோசமான - பரம அயோக்கியன் - பரமதொண்டு.

பலான்வெளி = அதிகாலை.

பண்ணி = செய்து - அன்னவை பிறவும் பன்மரம் பண்ணி - (பெருங்கதை.)

பண்ணாட்டு = பண்ணையில் ஆணை செலுத்துவது.

படியாள் = தானியக் கூலிக்காகப் பண்ணையில் வேலை செய்பவன்.

பன்னிப் பன்னி = மீண்டும் மீண்டும் ; யோசித்து யோசித்து பேசிக்கொண்டே இருப்பது.

பயிராகுதல் = மாடு, எருமை, சினையாகுதல் (கருத் தரித்தல்)

பருப்பு வேகாது = காரியம் நடக்காது.

பழைய புளி = அனுபவப்பட்டவன்.

பரியம் = திருமணச்சீர் - பாசிழை நன்கலம் பரிய மாக - (பெருங்கதை.)

பழமை = பேச்சுப் பேசுவது.

பட்டாங்கு = உலக வழக்கில் உள்ளது.

படு = மிகவும் - படுமோசம் - படுபாவி.

பசையாது = சரிப்பட்டு வராது.

பதர் = எதற்கும் பயன்படாத மனிதன். பதர்ச்சொல் பருப்பொருள் - (பெருங்கதை.)

பழங்கிடை = மிகப் பழமையான ஊர்.

பந்துபண்ணி = சிறைப்படுத்தி வைப்பது.

பாட்டப்ப கவுண்டர் = பாடு = உழைப்பு. உழைக்கும் கவுண்டர் என்று அர்த்தம்.

பால் ஓலை = குற்றவாளி அல்ல என்று பட்டக்காரன் தீர்ப்பு வழங்கிய ஓலை.

பாறாவில் வைப்பது = காவலில் வைப்பது.

பாப்பாத்தி = செல்லப் பெயர். பார்ப்பு = குஞ்சு என்ற தமிழ் சொல் வேரில் முளைத்த சொல்.

பார்ப்பு = இளம் பெண் குழந்தையைச் செல்லமாக அழைப்பது - பார்ப்பு = குஞ்சு. பாப்பம்மாள்.

பாண்டி ஈஸ்வரர் = கொங்கு நாட்டில் பாண்டியன் நிலை நாட்டிய சிவன்.

பாப்பண்ண கவுண்டர் = சிவபெருமானின் பெயர். பாம்பு அண்ணர் என்ற சொல்லின் திரிபு. பாம்பண்ண கவுண்டர் என்பது அசல் வடிவம்.

பிருமத்தி = செய்வது என்ன என்று புரியாமல் திகைத்து நிற்பது.

பிசகு = தவறு - பிழை.

பிடிபடாமல் = ஒத்துவராமல் - பொருந்திவராமல்.

பிணை முறி = ஜாமீன் ஓலை.

பிரியமாக = அதிக விலைக்கு விற்கும் நிலை. சந்தையில் கத்தரிக்காய் பிரியமாக விற்கப்படுகிறது. பிரியம் கிராக்கி × சவுதம் - மலிவு

பிறாது = காவல் நிலையத்தில் தாக்கல் செய்யும் புகார் மனு.

பீத்தை = கந்தல் துணி - பீறல் என்ற சொல்லின் திரிபு.

புங்கன் - சிவபெருமான். புங்கக்கவுண்டர். பொங்கியாக் கவுண்டர் என்று திரிந்து வழங்குகிறது.

புருடை - புரடை = வெறும் பொய்வார்த்தைகளைக் கூறித் திரிபவன்.

புண்ணிய மில்லை = பலன் இல்லை.

பூளை வாக்கு = போலி வாக்கு.

பெரியசாமி = சிவபெருமான். பிறவா யாக்கை பெரியோன் - (சிலப்பதிகாரம்.)

பொள்ளை = உள்ளே ஒன்றும் இல்லாமல் வெளியே வெறும் ஓடு மட்டும் இருப்பது.

பொறித்த கொள்ளுக் கூட்டு = கொங்கு நாட்டின் சிறப்பான கூட்டுவகை.

பொட்டி மகனே! பொட்டி மகளே = கொங்குத் தமிழின் தனிச் சொல். மிகுந்த வியப்பை தெரிவிப்பது.

பொன்னான் = செல்லப் பெயர். சின்னப் பொன்னான் - பெரிய பொன்னான்.

பொல்லாப்பு = பொல்லாங்கு என்ற சொல்லின் திரிபு. பொல்லாங்கு × வல்லாங்கு.

பொடி நடை = சன்ன நடை.

பொடி = மண்ணின் தூள். வெயிலில் பொடி பற்றிக் கொள்ளும்.

பொழி = வரப்பு.

பொத்தியில் = பொதுவில்.

பொத்தி = நல்ல சொற்களை அடுக்கிக் கூறி, குறையை மறைப்பது. பொய் மொழி பொத்தி தீவினையாளரைத் தெளியக் கூறி - (பெருங்கதை.)

பொழுதை சுமத்துவது = நேரத்தைப் பகிர்ந்து வேலை ஆட்களுக்குக் கட்டளை கொடுப்பது.

பொக்கணம் = பழங்காலப் பை.

பொக்கரை = தரம் குறைந்த கழிசடையான கால்நடை.

போதரவு = ரகஸியமாக அறிவுரை கூறி மக்கள் மனதை மாற்றுவது. யூகி **போதரவு** - (பெருங்கதை.)
போதரவு X ஆதரவு.

போக்கியம் = ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலத்தைப்
குதவை = ) பயிரிடக் கொடுத்து முன்பணம் பெறுதல்.

போனகம் = வெயில் காலத்தில் குடிக்கும் இனிமையான பானம். ஒண்ணிறப் **போனக** மண்ணக மலிர - (பெருங் கதை.)

போகம் = விளைச்சல் - முதல் போக**ம்** - இரண்டாம் போகம்.

## ம - மா - மி - மீ - மு - மூ - மெ - மே - மொ - மோ -

மக = மகள் என்னும் சொல்லின் சுருக்கம்.

மப்பு = போதை.

மதப்பேய் = பெண்களைப் பிடிக்கும் பால் நோய்.

மழுப்புதல் = இழுகிய என்ற சொல்லின் திரிபு. உண்மையை மறைக்க முயல்வது. வெள்ளி வெண்சுதை யிழுகிய மாடம் - (மதுரைக் காஞ்சி.)

மறுவு பொறுக்குதல் = அறுவடையில் தப்பிவிட்ட கதிர்களை இரண்டாம் முறை கொய்து சேகரித்தல்.

மறுவலம் = மருமகனுக்குப் படைக்கப்படும் சிறப்பு விருந்து.

மங்கல வாழ்த்து = கவுண்டன்மார் திருமணச் சீர்.

மங்கலன் - குடிமகன் - கொங்கு நாவிதன்.

மல்லாண்டை = அறுவடைக் களத்தில், நல்ல விளைச்சலுக்காக வழிபடும் தெய்வம்.

மலை ஏறிவிட்டது = முடிந்துவிட்டது. அந்தக் காலம் மலை ஏறிவிட்டது.

மவுசு = கிராக்கி

மசையன்
மங்கு மசையன் } எதையும் நம்பும் இயல்பு கொண்டவன். அறிவுக் கூர்மையால் பகுத்தறியும் தகுதியில்லாதவன், மசக்கவுண்டர்.

மசக்கேப்பை மாறி = மசையன் போல் நடித்து ஏமாற்றுகிறவன்.

மழுங்கி = சுடுசொற்களைப் பொருட்படுத்தாமல் குடும்பம் நடத்தும் பெண்.

மகிழி = வண்டல் படிந்த நிலம்.

மாந்திகவுண்டர் = மாந்தரன் என்ற சேர மன்னன் நினைவாக ஏற்பட்ட பெயர். மாந்தைபுரம் - மாந்தீஸ்வரர் - மாந்தையூர் - மாந்தியக்கா - மாந்தியண்ணன்.

மாழாத = பொறுக்க முடியாத - மாழ்கி என்ற சொல்லின் திரிபு. மாழ்கி மலை ஏற - (நல்லதம்பி சர்க்கரை காதல்.)

மாண்டை = மாட்சிமைப்படுத்துதல். மாண்டார் வினைத் திட்டம் - மாண்டற்கறிதாம் பயன் - (திருக்குறள்.)

ஆள் பெயர் = செம்மாண்டை கவுண்டர், கருமாண்டை கவுண்டர்.

ஊர்ப் பெயர் = வேமாண்டம் பாளையம், செம்மாண்டம் பாளையம், உருமாண்டம் பாளையம், எம்மாண்டம் பாளையம், விருமாண்டம் பாளையம், பூமாண்டம் பாளையம், பெருமாண்டம் பாளையம்.

மார் = பன்மை. கவுண்டன்மார், அண்ணன்மார், தங்கை மார், தம்பிமார்.

மார் = முழம் - ஐந்து மார் - மார் பொழுது.

மாத்து = மாற்றி மாற்றி விரிக்கப்படும் துணி.

மாறிபத்து = பொறுப்பை ஒருவரிடம் ஒப்படைத்து அவர் வழியாகக் காரியங்கள் நடப்பது.

மடி = புடவையைப் பைபோல் கட்டுவது.

மலைப்பிஞ்சு = சிறுகற்கள்.

மக்கழித்தல் = ஊர் கூட்டத்தின் தீர்ப்பை முதலில் ஏற்றுக் கொண்டு பிறகு மனம் மாறி எதிர்ப்பது.

மக்கார் = இடக்கு.

மந்திரி = மந்திரம் கூறிப் பூசை போடுவது.

மடைத்தொழில் = தெய்வத்திற்குக் காணிக்கையாக்கும் தொழில். மடைப்பள்ளி - மடைவளாகம் - மடைத் தொழில் கழிந்தபின் - (பெருங்கதை.)

மாவிடை மரவிடை = நிலத்தை விற்பனை செய்யும் பத்திரத் தில் எழுதப்படும் வரி. மண்ணிலிருந்து முளைத்து நிற்கும் சகலமான செடி, கொடி, மரங்கள். விடை = விளைத்திறள், மரையான்கதழ் விடை - (மலைபடு கடாம்.)

மாட்டு = சுடு சொல் வீசிக் கண்டிப்பது - கரும்புகைச் செந்தீ **மாட்டி** - (சிறுபானாற்றுப்படை.

முசுவு = ஒரே வேலையில் தீவிரமான அக்கறை காட்டி அதிலே முக்குளித்து இருப்பது. நடவு முசுவு - அறுவடை முசுவு - கல்யாண முசுவு.

முசுக்கவுண்டன் = வேகமான கவுண்டன் - பாம்பண்ண கவுண்டன் குறவஞ்சி என்ற நூலில் முசுக்கவுண்டர் குறிக்கப்பட்டுள்ளது.

முங்கி = மூழ்கி - முன்னிய வங்க **முங்கிக்** கேடுற - (மணி மேகலை.)

முகதலை = நேர்முகமாக நீர் மோதும் இடம்.

முறித்துக் கொள்வது = எந்த விதமான உறவும் இல்லாமல் சொந்தத்தை முறித்துக் கொள்வது.

முன்பாரம் = பழைய பாக்கி.

முப்பால் மொழி = திருக்குறள்.

முறுகன் = முறுகு + கோன் = முருகன்.

முறுகு = கவுண்டன்மார் காதில் அணியும் தங்கவளையம்.

முடக்கடி = எதற்கும் ஒத்துழையாமல் வீம்புக்கு எதிர்ப்பது.

முட்டுவழி செலவு = பயிரிட ஆகும் செலவு.

முகாமி = ஊர் பொதுக் காரியத்தை முன் நின்று நடத்துபவன்.

முட்டாள் விளைச்சல் = மிக அதிகமான விளைச்சல் - முட்டா என்ற சொல், முட்டாள் என்று திரிந்து வழங்கு கிறது. **முட்டா** சிறப்பின் பட்டினம் பெறினும் - (பட்டினப்பாலை.) முட்டாள் பண்ணையம் - முட்டாள் வெள்ளாமை.

முச்சூடும் = முழுவதும்.

முத்துசாமி = கவுண்டன்மார் தெய்வம். கருங்கோழி, கரிய ஆடு, கரும்பன்றி ஆகிய கருப்புப் பொருள்களைக் காவு கொடுக்கும் தெய்வம். சங்க நூலில் குறிக்கப்படும் '**காரியுண்டிக் கடவுள்**' கொங்கு நாட்டு முத்துசாமி என்பது உறுதி.

முடுக்கு = மிகவும் வளைந்த குறுகலான வழி. **முட்டு முடுக்கு** மிட்டிடை கழியும் - (பெருங்கதை.)

முடை = நெருக்கடி - சமாளிக்க இயலாமல் திணறுவது.

முற்பாடு = ஊர் முதன்மை - கோயில் முதன்மை - திருவிழா முதன்மை.

முறுக்கம் = வாலிப வலிமையின் உச்ச கட்டம்.

முறுடி = சரியான உடல் வளர்ச்சி இல்லாதவள்.

முட்டில் = முட்டு + இல்லை = முட்டில். முடை × முட்டில்; முடை இல்லை என்று அர்த்தம். **முட்டில்** செல்வமொடு முறையிற் பிழையாது - (பெருங்கதை.)

மூப்பில் = தலைமையில் - கோயில் திருப்பணி வாலியப்ப கவுண்டர் மூப்பில் நடைபெற்று வருகின்றன.

மூஞ்சு போச்சுது = தீர்ந்து விட்டது.

மூட்டான் போடுவது = சட்டியில் மூடி, தலைகீழாகக் கவிழ்த்து வெளிப்பக்கம் தீமூட்டிச் சமைப்பது.

மெச்சு = பாராட்டு. மெச்சு × மெச்சா (மெச்சாதவர் - பகைவர்) **மெச்சா** மன்னரை - (பெருங்கதை.)

மிடாவிறைப்பு = மிடா தானியம் விதைக்கும் நில அளவு.

மொய் = முய் எனவும் உச்சரிப்பர். உறவினர் அளிக்கும் விருந்துக்குக் கைமாறாகத் தரப்படும் பணம். மொய் என்னும் சொல் மொசித்த என்ற சொல்லின் சிதைவு.

மொசித்த = உண்ண. மையூன் **மொசித்த** வொக்கலொடு- (புறநானூறு-96) மொய் கொண்ட மாக்கள் **மொசிக்க** ஊண் - (மணிமேகலை.)

மொல்லை மாறி = நயமாகப் பேசிக் கடன் வாங்கி ஏமாற்று கிறவன்.

மேலைக்கு = வரும் ஆண்டில்

மேல்போட்டுப் பேசுதல் = மற்றவர்களுக்காகத் தோள்மேல் கைபோட்டுப் பரிந்து பேசுதல்.

மேகாது = ஒத்துவராது - இணங்கி வாழ முடியாது. மேவார் என்ற சொல்லின் திரிபு. மேவார் = பகைவர். **மேவார்** கூட்டம் வவ்விய கொடுஞ்சி நெடுந்தேர் (பெருங்கதை.)

மேனிக்கு = வீதம். ரூபாயிக்கு 8 பழம் மேனிக்குக் கொடுப் பாயா ?

மேவி = சமன்செய்து.

மோதண்டகளாய் = மோதல் ஏற்பட்டு ஆள் சேதம் ஏற்படுதல்.

மோழை = கொம்பு இல்லாத காளை.

மோழம் = ஆசைவெறி

## இர - இரா - ரி - ரீ - ரெ - ரே - ரொ - ரோ

(இ)ரசவாதம் = செம்பைப் பொன்னாக்கும் முறை.

(இ)ரவுசு = இரைச்சல்.

(இ)ரண்டான் கெட்டது = இரண்டு விதமாகச் செய்தாலும் கெடுதல் வருவது. இப்படிச் செய்தாலும் கெடுதல் - அப்படிச் செய்தாலும் கெடுதல்.

(இ)ரக்கணம் கெட்டவன் = நாகரிகநயம் தெரியாதவன்.

(இ)ரக்கிரி = இலைக்கறி என்ற சொல்லின் சிதைவு. நிலத்தில் முளைக்கும் கீரைவகைக்கு ரக்கிரி என்பது பொதுப் பெயர்.

(இ)ராச கோபாலி = கொங்குநாட்டில் புழக்கத்திலிருந்த நாணயம்.

(இ)ராக்கியண்ணன் = கவுண்டான்மார் தெய்வம்.

(இ)ராசாகவுண்டர் } நஞ்சை இடையாறு ராஜாகோயில்
(இ)ராசாயி } வழித் தோன்றிய பெயர்கள்.

(இ)ராசியாகப் போவது = சண்டைக்குப் பிறகு இருபக்கமும் சமரசம் ஏற்பட்டு ஒத்துப் போவது.

(இ)ராசி = விளைச்சல். களத்தில் சோளம் ராசியாக வந்துள்ளது.

(இ)ராசியில்லாதவன் = யோகம் இல்லாதவன்.

(இ)ராதாபுரம் = தாராபுரம்.

(இ)ராட்டை வைத்துக் கொடுப்பது = கவுண்டன்மார் சீர் (சடங்கு) விதவைப் பெண்ணுக்கு ராட்டையில் நூல் நூற்றுப் பிழைக்க வழி செய்யும் சடங்கு.

(இ)ராங்கி பிடித்தவள் = அகந்தைக்காரி - கர்வம் பிடித்தவள்.

## இ-ல-லா-லி-லீ-லெ-லோ

(இ)லாடபுரம் = தாராபுரம்: வி ல் லா ட ர் பு ர ம் என்ற சொல்லின் திரிபு.

(இ)லம்பாடிச்சி = சண்டைக்காரி - வாயாடி - வம்பு சண்டைக் காரி.

(இ)ல்லாள் = மனைவி = இல் = வீடு. இல் + ஆள் = இல்லாள்.

லொட்டுலொசுக்கு = சின்னச் சின்ன ஆனால் சிக்கலான பொருள்கள் - வலிமைத்தமிழ். கொங்கு நாட்டுபாமர மக்கள் வலிமைத் தமிழைக் கலந்து பேசுவர்.

சாளை - சப்ரம், கூலி - நாலி, சந்தை - சாரி, பயிர் - பச்சை, நிது - நிந்தது.

(இ)லாயக்கு = தகுதி.

(இ)லாயம் = குதிரை கட்டப்படும் சாளை.

லொள் - லொள்ளு = கள் குடிவழியாகத் தோன்றிய சொல். கள் கால்வாசி - லொள்ளு முக்கால்வாசி என்பது பழமொழி. லொள்ளு = குறும்பு - விஷமத்தனம் - கொழுப்பு - மஞ்சள் கொழுப்பு - வேண்டுமென்று செய்யப்படும் சில்லறை தொல்லைகள் - எனப் பல அர்த்தத்தில் வழங்கி வரும் சொல்லாகும்.

(இ)லோலோ = சீரழிவு - நச்சரிப்பு - தொல்லை.

## வ - வா - வி - வீ - வெ - வே - வை - வொ - வோ -

வயணம் = எதற்காக வந்தாய் என்ற காரணத்தைக் கூறுவது.

வழவு = குடியிருக்கும் பகுதி = மேற்கு வழவு - கிழக்கு வழவு வெள்ளாள வழவு-செட்டிவழவு.

வலசு கூடை = குடிபெயர்ந்து போகும் பொழுது பாத்திர பண்டங்களை எடுத்துச் செல்லும் மிகப் பெரிய கூடை.

வலசு போவது = குடிபெயர்ந்து வேறு இடத்திற்கு போவது

வள்ளம் = முகத்தல் அளவை. 30 நாட்டுப் படி ஒரு வள்ளம். சுடர்பொன் வள்ளத்து - (பெருங்கதை.)

வணக்குதல் = எரியூட்டி வணங்குமாறு தாக்குவது

மழபுலம் வணக்கிய மாவண் புல்லி - (அகநானூறு-)

வடபரிசாரநாடு = வடபுரிசை நாடு என்ற தொடரின் திரிபு. புரிசை = கோட்டை

வந்ததும் போனதும் = வரவும் செலவும்.

வர வர = காலம் செல்லச் செல்ல.

வவ்வானி = தமிழ்ச் சொல். பவானி = பிராகிருதம்.

வக்கணை பேசுவது = கிண்டல் பேசுவது.

வகைச்சல் = வகையான வழி.

வலக்கை வார்த்தை சொல்லிக் கொடுத்தல் = வலக்கையால் அடித்துச் சத்தியம் செய்து கொடுப்பது.

வாய்ச்சுது = வாய்த்தது.

வரிசை வைத்துப் பேசுதல் = கொங்கு மரபுப்படி - ங்கோ இணைத்துப் பெயர் சொல்லாமல் முறைப்படி அழைப்பது பழக்கம். பெரிய அய்யன் - சின்ன அய்யன். பெரிய மாமன் - சின்ன மாமன்.

வாகு = பொருத்தமாக - மரத்தை வாகு பார்த்து கோடறியால் பிளக்கவேண்டும்.

வார்ப்பது = குளிப்பது.

வாலி = வலிமைக்குப் பேர் போனவன். வாலியப்ப கவுண்டர். வாலி என்று பேர் படைத்த பிறகு வடுவாலி என்று பேர் எடுக்க முடியுமோ ! பழமொழி.

வாங்குதல் = கைப்பற்றுதல். கோட்டையைக் கைப்பற்றுவது.

வாங்குதல் = வெட்டுவது. தலையை வெட்டுவது.

வாங்குதல் = பறித்தல் - மலர்ந்த கோங்கத்தட்டம் **வாங்கினார்** - (பெருங்கதை).

வாக்குத்தத்தம் கொடுத்தல் = வாக்கைச் சத்தியமாகப் பிறருக்குக் கொடுத்தல்.

வாட்டு = போட்டி - சபதம்.

வாக்கணம் = வால் கிண்ணம் என்ற சொல்லின் திரிபு.

வாய்ப்பழத்தான் = வெறும் வாய்வார்த்தை கூறித் திரிபவன்.

வாணராயர் = சமத்தூர் பவளகுல மன்னர்கள் பட்டம்.

விகாதம் = கெடுதல் செய்வது. குறுக்கே நிற்பது.

விளங்கப் பண்ணுதல் = குடிதழைத்துப் பேர் விளங்குமாறு செய்தல்.

விளம்புதல் = உணவுவகைகளைப் பகிர்ந்து பந்தியில் பரிமாறுதல்.

விருஞ்சு கட்டி = இறுக்கமாகக் கட்டி.

விடுமுதல் = மூலதனம் = விடுநெல் - விடு கோழி.

விட்டுப்பிடித்தல் = உறவினர்களிடம் சில காலம் பகை போல் நடித்து மீண்டும் உறவு கொள்வது.

வினை = பழங்கால செயலின் தொடர்ச்சி - பழவினை - பண்டை வளைவாகி வந்த **வினை** - (சிலப்பதிகாரம்).

விம்மாந்து இருப்பது = செருக்கி இருப்பது - வெருவுறு பிணையின் **விம்மாந்** தெழா - (பெருங்கதை).

விதறிப்போன = சிதறிப்போன.

விசுங்கிறது = விலகி-ஓய்வாக இருக்க நேரமில்லை.

விங்கிணித்தல் = விலகிப்போவது.

விசுக்கா = தடவை - முறை - மூன்று விசுக்கா போய் வந்தேன்.

வீச்சு = பாயும் தூரம்.

வீரராயன் பணம் = கொங்கு நாட்டில் புழக்கத்திலிருந்த காசு.

வீரமாத்தி = கணவன் மறைவிற்காகத் தன் இஷ்டப்படி தீக் குளித்த நோன்பு; பத்தினிப் பெண்டிர் நோன்பு -

வெள்ளைச்சோளம் = வெளுத்ததையெல்லாம் பால் என்று கருதும் மசையன்.

வெய்யரது = திட்டுவது.

வெதுப்புதல் = உதை கொடுத்தல்.

வெண்டுக்காய் = வெண்டைக்காய்.

வெட்டவாளும் கட்டக்கயிறும் = பட்டக்காரர் ஆட்சிக்கு அடையாளம்.

வேள் - வேளிர் = கவுண்டன்மார் தரித்துக் கொண்ட பட்டம்.

வேணாடர் = வேள் நாட்டின் மன்னர் - சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர் பட்டம்.

வேகம் = சினம் - கோபம் - **வேக** உள்ளத்து வேழம் தெரிந்து. (பெருங்கதை).

வேணம் = குழந்தைகள் தன்னும் இனிய பலகாரம்.

வேகாந்த வெயில் = சாகடிக்கிற மாதிரி கொடிய வெயில்.

# ஓலையக்கா பாட்டு

முதல் நாள் பொங்கல் திருநாள், இரண்டாம் நாள்—மாட்டுப் பொங்கல், மூன்றாம் நாள் பூப் பொங்கல். மாமன்மார் கன்னிப் பெண்களுக்குப் பூப் பொங்கல் சீர் செய்வர். பூப் பொங்கல் அன்று (பூ நோன்பு) மகளிர் சிறப்பாக, கன்னிப்பெண்டிர், ஊருக்கு அருகிலே யுள்ள மலை, குன்று, கரடு, ஆற்றங்கரை, கோயில் வெளி ஆகிய இடங்களுக்குத் தின்பண்டங்களுடன் சென்று, கன்னிமார் வழிபாட்டை முடித்துவிட்டு ஆவரம்பூ பறித்துக் கொண்டு தின்பண்டங்களைத் தின்றுவிட்டு, வீடு திரும்பி பூ பொங்கல் வைப்பது மரபு. ஓலையக்கா பாட்டுப் பாடி கும்மியடிப்பது பூப் பொங்கல் சிறப்பு நிகழ்ச்சியாகும். இதுவே கொங்கு நாட்டு மரபு.

ஓலையக்கா கொண்டையிலே ஒரு சாடு தாழம்பூ
தாழம்பூ சிற்றாடை—தலை நிறைய முக்காடு

நாழி நாழி நெல்குத்தி நடுக்கிணற்றில் பொங்கல் வைத்து
நாட்டாரை கூட்டமிட்டு
நடந்து போறாள்—ஓலையக்கா

மேல் படியை தூர்த்துப் போட்டு வெற்றிலை காம்பைக்
கிள்ளிப் போட்டு
மேனாட்டு ஓலையக்கா—மேற்கே குடி போறாளாம்

கும்பந்தலையிலே கோடாலி தோளிலே
வன்னிமரம் பிளக்க
வாறாளாம்—ஓலையக்கா

மஞ்சள் அறுபதென்பாள்—மைகோதி முப்பதென்பாள்
மஞ்சள் குறைஞ்சுதென்று மயங்குகிறாளாம்—
ஓலையக்கா

மாலை அறுபதென்பாள் மைகோதி முப்பதென்பாள்
மாலை குறைச்சலென்று மயங்குகிறாளாம்—
ஓலையக்கா

சீலை அறுபதென்பாள் சிற்றாடை முப்பதென்பாள்
சீலை குறைச்சலென்று சிணுங்குகிறாளாம்—
ஓலையக்கா

தான் போட்ட சிந்தாக்கை தான் கழற்ற மாட்டாமே
தாயோடு சீறாடி—தான்போறாள்—ஓலையக்கா

அஞ்சு அடுக்கு சட்டுவமாம் அடுப்புக்கேத்த
மண்டபமாம்
கொண்டு எடுக்க மாட்டாமே குடி போறாள்—
ஓலையக்கா

பொரும்பியடியிலே பொறிக்கோழி மேய் கையிலே
பொரும்பி அலைக்கொட்டப் போறாளே—ஓலையக்கா

தகரையடியிலே தன் கோழி மேய்கையிலே
தகரை அலைக்கொட்டி தான் போறாள்—ஓலையக்கா

கல்கிடக்கு கழுவாமே நெல் கிடக்கு குத்தாமே
மேனாட்டு ஓலையக்கா—மேற்கே குடி போறாளாம்

ஓலையக்கா கொண்டையிலே ஒரு சாடு தாழம்பூ
தாழம்பூ சுற்றிவர தாம்பாளங் கொட்டிவர
கெண்டை தளதளக்க கண்ணாடி மினுமினுக்க
பொழுது தளதளக்க புறப்பட்டாள்—ஓலையக்கா

அவரை சலசலக்க ஆடிமீன் ஓடி வர
குதிரையெலாங் கொஞ்சிவர கொந்தளத்தார்
குடை பிடிக்க
தாயோடு சீராடி தான் போறாள் ஓலையக்கா

பாக்கு பதின் கலமாம் பச்சரிசி முக்கலமாம்
எண்ணை இரு நாழி—இளந்தேங்காய் பத்தெட்டு
இத்தனையும் கொண்டு வந்து இறக்கினாள் பந்தலிலே
மலையாள பகவதிக்கு மாலையிடப் போறாளாம்
கடுகாம் சிறுமிளகாம் காரணத்துக் கற்பூரம்
நடுவே மணல் பரப்பி நல்லோலை புல்லோலை
நாட்டுப்பனையோலைப் பேழை கொண்டு வருவாளாம்
முச்சி வைத்து முறம் வைத்து மூன்றிறகு ராட்டை
வைத்து
பானைகரி கழுவி பன்னீர் உலை வைத்து
செந்நெல் அரிசி தீட்டி சமைத்து வைத்து
ஆக்கினாள் சோறுகறி அரளிப்பூ தன் நிறமாய்
ஆக்கின கறிக்கு மேற்கறி இல்லாமே
அள்ளி எறிந்தாளே அழகான மார் மேலே
துள்ளி எழுந்தாளே தூங்கு மஞ்சக் கட்டிலிலே
சிற்றாறங் கரைதனிலே சிறுமணல் கொழிக்கும்
பெண்ணே
உற்றார் அறியாமே உறவாட வல்லாயோ
தட்டாறியாமே தாலி பண்ணவல்லாயோ
அடுப்புப் புகையாமே ஆக்கிவிட வல்லாயோ
தாயோடு சீராடி நாயோடு போறாளாம்—ஓலையக்கா

# கேந்திப் பாட்டு

நாலு மூலை வயலுக்குள்ளே
நடவு நடும் குட்டைப் பெண்ணே
நானும் கொஞ்சம் ஏழையடி
நடவு நொஞ்சம் கிட்டப்போடு

அருப்பு அருத்து பிரி திரித்து
அன்னம் போலே கட்டுக்கட்டி
சின்னக்கட்டை தூக்கச் சொல்லி
சிமிட்டுகிறாளே கண்ணைக் கண்ணை

ஊருக்கு மேவரமாம்
ஊசிப்பில் சாமைகாடாம்
சாமைகாட்டு காவலுக்கு
சாமத்திலே நான் வருவேன்

மாரளவு தண்ணிக்குள்ளே
மன்னி மன்னி போற புள்ளே
மாராப்பு சீலைக்குள்ளே
மாங்கனியைக் கண்டேனே

# தாலாட்டு

விளையாட போனபக்கம்
வெயில் அடிக்குமென்று
கரும்பாலே பந்தல்
கட்டிவச்சார் உன் அய்யன்
வெள்ளிக் கிலுகிலுப்பை
விளையாடக் கொண்டு போனாய்

யார் அடிச்சா நீ அழுதாய்
அழுது வந்தாய் வாய் வலிக்க
அடிச்சவரை சொல்லி அழு

என் கண்ணே
ஆக்கினை செய்திடலாம்
தொட்டவரை சொல்லி அழு
தோள் விலங்கு பூட்டி டலாம்
மாமன் அடிச்சானோ
மல்லிகை பூ செண்டாலே
அத்தை அடித்தாளோ
அரளிப் பூ செண்டாலே

யாரும் அடிக்கவில்லை
அயலாரும் தீண்டவில்லை
பசியறிந்து பால் வார்ப்பாள்
பசுங்கிளியாய் உன் தாய்
பாலை அருந்தி
பஞ்சணையில் நித்திரை போ
நித்திரை போ நித்திரை போ
சித்திரப் பூ தொட்டிலிலே

# அழுகாச்சுப் பாட்டு

கப்பல்வரப் போகு தென்று—நான்
கரையேறிப் பார்த்திருந்தேன்

கப்பல் உடைந்த போதே—நான்
கரையோரம் நின்றழுதேன்

தோணிவரப் போகு தென்று—நான்
துறை ஏறிப் பார்த்திருந்தேன்

தோணி உடைந்த தென்று—நான்
துறையோரம் நின்றழுதேன்



சொற்போர்களில், பரிசுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர். மேடையில் சிறந்த அனுபவம் கொண்டவர்.

**பெருந்தலைவர் காமராஜ்**

கொங்கு வேளாளர் வரலாற்றைத் தமிழ் உலகிற்கு தந்து பெருமை ஏந்தியவர்.

**கோவை அய்யாமுத்து**

புள்ளிமானைப் போல் துள்ளித் துள்ளி ஓடும் தமிழ்நடை எழுதுவதில் வல்லவர்.

**ஜெகச்சிற்பியன்**

மரபுநிலை வழுவாத ஆராய்ச்சி திறன் படைத்தவர்.

**பெரும்புலவர் தெய்வசிகாமணிக்கவுண்டர்**

சிறந்த சிந்தனையாளர், பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிக்கவர். செய்தி மக்கள் தொடர்புத்துறையில் இணை இயக்குநராகப் பணியாற்றிப் பலவகையிலும் முன் மாதிரி யான நேர்மையான மனிதப் பண்பாளராக வாழ்ந்து காட்டியவர்.

**டாக்டர். மு. முத்துக்காளத்தி**